19-12-2016

தி இந்து
தமிழால் இணைவோம்

**திருச்சி, தஞ்சாவூர், காஞ்சிபுரம், நாமக்கல், மதுரை மாவட்டங்களில் இலவச அவசர கால்நடை மருத்துவ ஊர்திகள்: அவசர சிகிச்சைக்கு '1962'-ஐ அழைக்கலாம்**




கால்நடைகளுக்கு உயிர் காக்கும் சிகிச்சை அளிப்பதற்காக அரசால் வழங்கப்பட்டுள்ள, ஹைட்ராலிக் லிப்ட் வசதியுடன் கூடிய இலவச அவசர கால்நடை மருத்துவ ஊர்தி. படம்: ஜி.ஞானவேல்முருகன்

கால்நடைகளுக்கு உயிர் காக்கும் அவசர சிகிச்சை அளிப்பதற்காக திருச்சி, தஞ்சாவூர், காஞ்சிபுரம், நாமக்கல், மதுரை ஆகிய மாவட் டங்களுக்கு தலா 2 இலவச அவசர கால்நடை மருத்துவ ஊர்திகள் வழங்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

ஊரகப் பகுதிகளில் இயங்கி வரும் நகரும் கால்நடை மருத்துவ அலகுகள் வழக்கமான கால் நடை மருத்துவ சேவைகளை மட்டுமே விவசாயிகளின் இருப் பிடங்களுக்குச் சென்று வழங்கி வருகின்றன.

**உயிர் காக்கும் சிகிச்சை**

சில நேரங்களில் கால்நடை களுக்கு அவசர சிகிச்சை தேவைப் படும். அவ்வாறு கால்நடைகளுக்கு உயிர் காக்கும் சிகிச்சை அளிப்ப தற்காக நடமாடும் கால்நடை மருத் துவ ஊர்தி சேவைத் திட்டம் கடந்த செப்டம்பர் மாதம் அறி முகப்படுத்தப்பட்டது. இந்த திட் டத்தை தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகத்தின் சிகிச்சைகள் இயக்கு நரகம் செயல்படுத்தி வருகிறது.

முதல்கட்டமாக தற்போது திருச்சி, தஞ்சாவூர், காஞ்சிபுரம், நாமக்கல், மதுரை ஆகிய மாவட் டங்களுக்கு மொத்தம் ரூ.6.33 கோடி செலவில் நவீன வசதிகளுடன் கூடிய தலா இரு வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

**காலை 8 - மாலை 8 மணி வரை**

இந்த வாகனங்களில் ஒரு கால்நடை மருத்துவர், கால்நடை உதவியாளர், ஓட்டுநர் ஆகியோர் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர். தற்போது இந்த வசதியை காலை 8 முதல் இரவு 8 மணி வரை கால்நடை வளர்ப்பவர்கள் பயன்படுத்திக் கொள்ளலாம். இதற்கு ‘1962’ இலவச தொலைபேசி எண்ணைத் தொடர்புகொள்ளலாம்.

இந்தத் திட்டம் குறித்து தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் சார்பில் திருச்சியில் செயல்பட்டு வரும் கால்நடை பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய பேராசிரியர் மற்றும் தலைவர் டாக்டர் பி.என். ரிச்சர்டு ஜெகதீசன், ‘தி இந்து’விடம் கூறியதாவது:

கால்நடை வளர்ப்போர் தங்களது கால்நடைகளுக்கு தேவைப்படும் அவசர உதவிக்கு ‘1962’ என்ற இலவச தொலைபேசி எண்ணைத் தொடர்புகொள்ளலாம். மாடுகள் கன்று ஈன இயலாமை, கருப்பை வெளித் தள்ளுதல், விஷ செடிகளை உட்கொண்டதால் ஏற்படும் பிரச் சினை, பாம்பு உள்ளிட்ட விஷ ஜந்துகள் தீண்டியதால் ஏற்படும் பாதிப்புகள், விபத்துகளால் ஏற்படும் காயம் உள்ளிட்டவைகளுக்கு கால்நடைகளின் இருப்பிடத்துக்கே நேரடியாகச் சென்று இலவசமாக சிகிச்சை அளிக்கப்படும்.

**உபகரணங்கள், மருந்துகள்**

இந்த வாகனத்தில் அல்ட்ரா சவுண்ட் ஸ்கேனர், ஜெனரேட்டர், மாடுகளை படுத்த நிலையிலோ அல்லது நின்ற நிலையிலோ எடுத் துச் செல்ல வசதியாக ஹைட்ராலிக் லிப்ட் உள்ளிட்ட அவசர கால சிகிச்சைகளுக்குத் தேவைப்படும் அனைத்து உபகரணங்கள் மற்றும் மருந்துகள் உள்ளன.

பாதிக்கப்பட்ட கால்நடை களுக்கு நேரடியாக சிகிச்சை அளிக்கப்படும். மேல் சிகிச்சை தேவை என மருத்துவர் கருதினால், அந்த கால்நடையை அதே வாகனத் தில் எடுத்துச் சென்று அருகிலுள்ள மருத்துவமனையில் சேர்த்து தொடர் சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்யப்படுகிறது. இந்த வாகனத்தின் மூலம் தமிழக அரசு வழங்கியுள்ள விலை யில்லா கறவை மாடுகள் மற்றும் வெள்ளாடுகளுக்கு சினைப் பருவ ஒருங்கிணைப்புத் திட்டமும் அந் தந்த மாவட்டங்களில் செயல் படுத்தப்படுகிறது.

இந்த இலவச அவசர சிகிச்சை வாகனத்தை ‘1962’ என்ற இலவச தொலைபேசி எண்ணை தொடர்பு கொண்டு அழைக்கலாம். அவ்வாறு அழைக்கும் போது, தங்களது பெயர், தெளிவான முகவரி, கால்நடைக்கு ஏற்பட்டுள்ள பிரச் சினை ஆகியவை குறித்து முழு மையான தகவல்களை தெரிவிக்க வேண்டும்.

**அவசர காலத்துக்கு மட்டும்**

இந்தத் திட்டம் முழுமையாக அவசர காலத்தில் உதவிடும் வகை யில் செயல்படுவதால், அவசர காலத்துக்கு மட்டுமே கால்நடை வளர்ப்போர் தொடர்பு கொள்ள வேண்டும் என்றார். தொடர்ந்து, தமிழகத்தில் உள்ள மேலும் 27 மாவட்டங்களுக்கு ரூ.37.88 கோடி மதிப்பீட்டில் இந்த திட்டம் விரிவாக்கம் செய்யப் படவுள்ளது குறிப்பிடத்தக்கது.

**ஆரோக்கிய ஆப்: தண்ணீர் குடிப்பதற்கு ஒரு நினைவூட்டி**

## Hydro Coach - drink water

நம்ம ஊர் தட்பவெப்பத்துக்கு நிறைய தண்ணீர் குடித்தாக வேண்டும். ஒவ்வொருவரின் உடல் அமைப்புக்கு ஏற்பக் குடிக்க வேண்டிய தண்ணீரின் அளவும் மாறுபடும். நாம் ஒரு நாளைக்கு எந்த அளவு தண்ணீர் குடிக்க வேண்டும் என்பதைத் தெரிந்துகொள்வதற்காக வந்திருக்கும் ஆண்ட்ராய்ட் ஆ 'Hydro Coach - drink water'.

வேலை மும்முரத்தில் தண்ணீர் குடிப்பதற்கு மறந்துவிடுபவர்களும் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு தண்ணீர் குடிக்க வேண்டும் என்பதை ஞாபகப்படுத்தவும், எவ்வளவு தண்ணீர் குடிக்க வேண்டும் என்பதைச் சொல்லவும் இந்த 'ஆப்' பயன்படுகிறது.

**பிரத்யேகத் தகவல்**

உங்கள் உடல் எடை, வயது, பாலினம் ஆகியவற்றிற்கு ஏற்பச் சரியான அளவை இந்த 'ஆப்' மூலம் தெரிந்துகொள்ளலாம். அதற்கு வசதியாக உங்கள் உடல் எடை, வயது ஆகிய தகவல்களை முன்கூட்டியே இதில் பதிவு செய்ய வேண்டும். ஒரு நாளைக்கு நீங்கள் எவ்வளவு தண்ணீர் அருந்துகிறீர்கள்? எவ்வளவு தண்ணீர் உங்களுக்குத் தேவைப்படுகிறது என்பதை அலாரம் வைத்ததுபோல் இந்த `ஆப்' உங்களுக்கு நினைவுபடுத்திவிடும்.

போதுமான அளவு தண்ணீர் பருகுவதால் சருமம் பொலிவாக இருக்கும். இந்த 'ஆப்'பை பயன்படுத்திச் சரியான முறையில் தண்ணீர் பருகிவந்தால், சில நாட்களிலேயே உடல் ஆரோக்கியம் பெறுவதை உணரலாம். உடல் எடையைக் குறைக்க விரும்புபவர்களுக்கும்

இந்த 'ஆப்' பயன்படும். இந்த 'ஆப்'பில் உடல் ஆரோக்கியத்துக்குத் தேவையான காய்கறிகள், பழ வகைகள் பற்றிய கட்டுரைகள், சமையல் செய்முறைகளை விளக்கும் பிரத்யேக வலைப்பூ உள்ளது. அதில் உடல்நலம் சார்ந்த பல தகவல்களைத் தெரிந்துகொள்ளலாம்.

**மரங்கள் அழிந்த பகுதியில் 2 டிகிரி வெப்பம் அதிகரிக்க வாய்ப்பு; ஒலி, ஒளி, காற்று மாசு உயரும் என்பதால் கவனம் தேவை'**



வார்தா புயலுக்குப் பின்... | கோப்புப் படம்: எம்.வேதன்

***சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் அறிவுறுத்தல்***

வார்தா புயல் காரணமாக ஆயிரக்கணக்கான மரங்கள் அழிந்து, பசுமை பரப்பு குறைந்துள்ளதால், கோடையின்போது 2 டிகிரி செல்சியஸ் வரை வெப்பம் அதிகரிக்க வாய்ப்புள்ளதாக சுற்றுச் சூழலியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம் மாவட்டங்களைச் சமீபத்தில் சூறையாடிய வார்தா புயல், ஒரு லட்சம் மரங்களுக்கு மேல் அழித்துவிட்டது. சென்னை யில் மட்டும், விழுந்த பெரிய அளவிலான, 50 ஆண்டுகள் பழமையான மரங்கள் 30 ஆயி ரத்தைத் தாண்டும் என்கின்றனர் தாவரவியல் ஆய்வாளர்கள். பசுமைப் போர்வையை இழந் துள்ள சென்னை, புறநகர், திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட் டங்களில் அடுத்தடுத்த நிகழ்வுகள் எப்படியிருக்கும் என்பதையும் நாம் சிந்திக்க வேண்டும். அப்போது தான் பாதிப்புகளை எதிர்கொள்ள முடியும்.

வெப்பம் அதிகரிக்கும்

மரங்களின் அளவு குறைவதால், காற்றில் ஈரப்பதம் குறைந்து, நீர்நிலைகளில் உள்ள நீரும் விரைவாக ஆவியாகிவிடும். இத னால், வெப்பநிலை அதிகரிக்கும் என சூழலியலாளர்கள் கருதுகின் றனர். இது தொடர்பாக, சுற்றுச் சூழலியலாளர் நக்கீரன் கூறும் போது, "காற்றில் உள்ள ஈரப் பதத்தை நிலைப்படுத்துபவை மரங்கள்தான். மரங்கள் இல்லா விட்டால் காற்றில் வெப்பம் அதி கரிக்கும்.

சூடான காற்று மேலெழும்பி வீசும்போது, மீதமுள்ள மரங்கள் சேமித்துள்ள ஈரத்தையும் கவரும். நீர்நிலைகள் துரிதமாக ஆவியாகும். பசுமை பரப்பு குறைவதால் சாதாரணமாக 2 டிகிரி செல்சியஸ் வரை வெப்பம் அதிகரிக்கும். மரங்களற்ற சாலை களில் 3 டிகிரி செல்சியஸ் வரை வெப்பம் அதிகரிக்கும். புறநகரை விட நகரங்களில் வெப்பநிலை அதிகமாகும்” என்றார்.

**ஒளி, ஒலி அளவு உயரும்**

பொதுவாக கான்கிரீட் கட்டி டங்கள் அதிகம் உள்ள நகரங் களை, வெப்பத்தீவு என சூழலிய லாளர்கள் வர்ணிக்கின்றனர். அந்த அளவுக்கு கான்கிரீட் கட்டிடங்கள் வெப்பத்தை உள்வாங்கி, அதன் பின் வெளிப்படுத்துகின்றன.

இதுதவிர, கட்டிடங்களும், தார்ச்சாலையும் ஒளியைப் பிரதி பலிக்கும் தன்மை கொண்டவை என்பதால், ஒளியின் பாதிப்பு அதிகரிக்கும்.

இதுகுறித்து நக்கீரன் கூறும் போது, "பொதுவாக மரங் கள் அடர்ந்துள்ள பகுதிகளில் வெயிலால் கண் கூசாது. மரங்களே இல்லாத பகுதியில் வெளிச்சம் அதிகரித்து கண்கள் கூசும். மரங்கள் உள்ள பகுதிகளில் 10 சதவீதத்துக்கு கீழ்தான் பிரதிபலிப்பு இருக்கும். ஆனால், கட்டிடங்கள் 60 சதவீதம் பிரதிபலிப்பதால் பாதிப்புகள் இருக்கும். அதே போல், காற்றில் பரவும் ஒலியை பொறுத்தவரை, பகலில் 90 டெசிபல், இரவு 80 டெசிபல் அளவு இருக்கும். சாலையில் 50 அடிக்கு மரங்கள் தொடர்ந்து இருந்தால். அந்த மரங்கள் காற்றில் பரவும் சப்தத்தை 20-30 டெசிபல் அளவுக்கு குறைத்துவிடும்" என்றார்.

**அதிகரிக்கும் காற்று மாசு**

காற்று மண்டலத்தில் வாகனங் கள் வெளியிடும் கார்பன் மோனாக் சைடு மற்றும் சிறு துகள்களின் அளவு அதிகரிக்கும்போது சுவா சக்கோளாறுகள் ஏற்படும். இந்த பாதிப்புகளை இயற்கையாகவே மரங்கள் குறைத்து வந்தன. தற்போது மரங்கள் குறைவதால் மாசு அதிகரிக்கும்.

இதுபற்றி நக்கீரன் மேலும் கூறும்போது, "காற்று மண்டலத்தில் உள்ள தூசியை மரங்கள் 70 சதவீதம் ஏற்றுக் கொள்ளும். அந்த தூசியை மழை வரும் போது, மீண்டும் தரைக்கு கொண்டு சேர்த்துவிடும். மரங்கள் இல்லாவிட்டால், 70 சதவீதம் தூசியும் பாதிப்பை ஏற்படுத்தும். கார்பன் அளவு அதிகரிக்கும். இந்த பாதிப்புகளை அடுத்த கோடைக்காலத்தில் உணர முடியும்" என்றார்.

**கவனம் தேவை**

ஏற்கெனவே பருவகால மாற்றம் சுற்றுச்சூழலில் பல்வேறு பாதிப்புகளை ஏற்படுத்தி வருகிறது. இந்நிலையில், ஒவ்வொரு பகுதியையும் சார்ந்த நுண் பருவநிலையில் நாம் கவனம் வைக்க வேண்டும் என்கிறார் நக்கீரன்.

இது தொடர்பாக அவர் கூறும் போது, "மரங்கள் அதிகமுள்ள, மழையை கவரும் பகுதியை நுண் பருவநிலை கொண்ட பகுதி எனலாம். சிறு குன்றுகள் இருந்தால் கூட மழை அதிகரிக்கும்.

இந்தவகையில் சென்னையில் கிண்டி நுண் பருவநிலை கொண்ட பகுதியாகும். இது போன்ற பகுதிகளில் பசுமைப் பரப்பை மீண்டும் கொண்டுவர வேண்டும்.

அதற்காக எளிதில் விழும் மரங்களை நடக்கூடாது. ஆணிவேர் கொண்ட மரங்களை அதிகளவு வளர்க்க வேண்டும். விதைகளை நேரடியாக ஊன்றினால்தான் ஆணிவேர் பலமான மரங்கள் கிடைக்கும். வளர்த்து நடப்படும் மரங்கள் இந்த அளவுக்கு உறுதி யாக இருக்காது. குறிப்பாக நமக்கே உரிய இயல்வகை மரங் களை அதிகளவில் நடவேண்டும். எவ்வளவு இழந்துள்ளோமோ அதைவிட அதிகமாக பசுமைப் பரப்பை அதிகரிக்க வேண்டும்" என்றார்.

**கரும்பு கொள்முதல் விலை டன்னுக்கு ரூ.4 ஆயிரமாக அரசு அறிவிக்க வேண்டும்**

விவசாயிகளுக்கு புத்தாண்டு மற்றும் பொங்கல் பரிசாக கரும்பு கொள்முதல் விலை டன்னுக்கு ரூ.4000 என்று அரசு அறிவிக்க வேண்டும் என்று பாமக நிறுவனர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக இன்று (திங்கள்கிழமை) அவர் வெளியிட்ட அறிக்கையில், "தமிழகத்தில் உள்ள பெரும்பாலான பொதுத்துறை மற்றும் தனியார் சர்க்கரை ஆலைகளில் கரும்பு அரவைப் பருவம் தொடங்கி சில வாரங்கள் ஆகிவிட்டன. சர்க்கரை உற்பத்திக்காக விவசாயிகளிடமிருந்து கரும்பு கொள்முதல் தீவிரமடைந்துள்ள நிலையில், அதற்கான கொள்முதல் விலை இன்னும் அறிவிக்கப்படவில்லை. இவ்விஷயத்தில் தமிழக அரசு காட்டும் அலட்சியம் கண்டிக்கத்தக்கது.

தமிழகத்தில் ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் மாதம் தொடங்கி மார்ச் மாதம் வரை சர்க்கரை ஆலைகள் செயல்படுவது வழக்கம். கரும்பு கொள்முதல் செய்யப்பட்ட நாளில் இருந்து இரு வாரங்களில் அதற்கான விலை விவசாயிகளின் வங்கிக் கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

வழக்கம் போலவே நடப்பாண்டிலும் அக்டோபர் மாதம் முதல் படிப்படியாக சர்க்கரை ஆலைகளில் அரவைப் பருவம் தொடங்கி விட்ட நிலையில், கரும்புக்கான விலை இன்னும் விவசாயிகளுக்கு வழங்கப்படவில்லை. இதற்குக் காரணம் கரும்பு கொள்முதல் விலையை தமிழக அரசு அறிவிக்காதது தான்.

அரவைப் பருவம் தொடங்குவதற்கு முன்பே அக்டோபர் மாதத்தில் கொள்முதல் விலை அறிவிக்கப்பட வேண்டும். ஆனால், டிசம்பர் மாதமாகியும் கரும்பு விலை அறிவிக்கப்படாததில் இருந்தே அரசு முடங்கிக் கிடப்பதை உணர முடியும்.

2016-17ஆம் ஆண்டிற்கான கரும்பு கொள்முதல் விலையை மத்திய அமைச்சரவை கடந்த ஏப்ரல் 6-ஆம் தேதியே அறிவித்து விட்டது. அத்துடன் தமிழக அரசு ஊக்கத் தொகையை சேர்த்து மாநில அரசின் பரிந்துரை விலையை அறிவிக்க வேண்டும்.

தமிழகத்தில் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு வரை மத்திய அரசு அறிவிக்கும் விலையுடன், மாநில அரசின் பரிந்துரை விலையாக ரூ.650 சேர்த்து வழங்கப்பட்டு

வந்தது. 2013, 2014 ஆகிய ஆண்டுகளில் இது டன்னுக்கு தலா ரூ.100 வீதம் மொத்தம் ரூ.200 குறைக்கப்பட்டது. கடந்த ஆண்டில் பரிந்துரை விலை ரூ.100 அதிகரிக்கப்பட்டது. கரும்புக்கான கொள்முதல் விலையை மத்திய அரசு கடந்த 3 ஆண்டுகளாக மிகக் குறைந்த அளவிலே உயர்த்தி வரும் நிலையில், அதை ஈடுகட்டும் வகையில் பரிந்துரை விலை அதிகரிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், அரசோ சர்க்கரை ஆலைகளுக்கு ஆதரவாக செயல்பட்டு பரிந்துரை விலையை குறைத்துவிட்டது.

நடப்பு பருவத்திற்கான கரும்பு கொள்முதல் விலையை மத்திய அரசு உயர்த்தவில்லை. இத்தகைய சூழலில் மாநில அரசு அதன் பரிந்துரை விலையை உயர்த்தி வழங்கினால்தான் விவசாயிகளின் நலனை பாதுகாக்க முடியும்.

உத்தரப் பிரதேச அரசு கரும்புக்கான பரிந்துரை விலையாக டன்னுக்கு ரூ.750 சேர்த்து ரூ.3050 வழங்கப்படும் என்று அறிவித்திருக்கிறது. மத்திய அரசு அறிவித்துள்ள கொள்முதல் விலை விவசாயிகளுக்கு எந்த வகையிலும் பயனளிக்காது என்பதால், நடப்பு பருவத்திற்கான தமிழக அரசின் பரிந்துரை விலையை நிர்ணயிப்பதற்கு அதை அடிப்படையாக கொள்ளக் கூடாது.

அதுமட்டுமின்றி, மத்திய அரசின் கொள்முதல் விலை அறிவிக்கப்பட்டதற்கு பிறகு சர்க்கரை சந்தை நிலவரம் தலைகீழாக மாறிவிட்டது. கடந்த ஆண்டு ஜூலை மாத நிலவரப்படி தமிழகத்திலுள்ள சர்க்கரை ஆலைகளில் இருந்து ஒரு டன் சர்க்கரை ரூ.21,640 என்ற விலைக்கு கொள்முதல் செய்யப்பட்டது.

ஆனால், அதன்பின் படிப்படியாக விலை உயர்ந்து கடந்த வார நிலவரப்படி தமிழக சர்க்கரை ஆலைகளில் இருந்து கொள்முதல் செய்யப்படும் சர்க்கரையின் விலை டன்னுக்கு ரூ.36,250 ஆக உயர்ந்திருக்கிறது. இது சுமார் 70% உயர்வாகும். இதனால் சர்க்கரை ஆலைகளுக்கு கிடைக்கும் கூடுதல் லாபத்தில் ஒரு பகுதி விவசாயிகளுக்கும் கிடைக்கும் வகையில் கொள்முதல் விலை நிர்ணயிக்கப்பட வேண்டும்.

தமிழகத்தில் ஒரு டன் கரும்பு உற்பத்தி செய்ய ரூ.2450 செலவு ஆவதாக தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் ஆய்வில் தெரியவந்துள்ளது. அத்துடன் 50% லாபம் மற்றும் போக்குவரத்து செலவுகள் சேர்த்து ஒரு டன் கரும்புக்கு கொள்முதல் விலையாக ரூ.4,000 நிர்ணயிக்க வேண்டும்.

சர்க்கரை விலை 70% வரை அதிகரித்திருப்பதாலும், சர்க்கரை தயாரிக்கும்போது கிடைக்கும் துணைப் பொருட்களின் மூலம் கிடைக்கும் வருவாய் அதிகரித்திருப்பதாலும் இந்த அளவுக்கு கொள்முதல் விலை நிர்ணயம் செய்வது சாத்தியம் தான். இதை உணர்ந்து விவசாயிகளுக்கு புத்தாண்டு மற்றும் பொங்கல் பரிசாக கரும்பு கொள்முதல் விலை டன்னுக்கு ரூ.4000 என்று அரசு அறிவிக்க வேண்டும்" என்று ராமதாஸ் கூறியுள்ளார்.

**'வார்தா' புயல் பாதிப்புகளை ஆய்வு செய்ய அடுத்த வாரம் மத்திய குழு தமிழகம் வருகை**




சென்னையைப் புரட்டிப் போட்ட வார்தா புயல். | படங்கள்: ஆர்.ரகு

'வார்தா' புயல் பாதிப்புகளை ஆய்வு செய்ய மத்திய குழு அடுத்த வாரம் தமிழகம் வருகிறது.

மத்திய உள்துறை அமைச்சக இணை செயலர் தலைமையில் குழு வர உள்ளது. இக்குழு சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களை ஆய்வு செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது.

'வார்தா' புயலின் வேகத்துக்கு ஈடு கொடுக்க முடியாமல் சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களில் 1 லட்சத்துக்கும் அதிகமான மரங்கள் சாய்ந்தன. மின் கம்பங்கள் சாய்ந்ததால் மின் விநியோகம் தடைபட்டது. மின்சாரம், பால், குடிநீர் கிடைக்காமல் மக்கள் கடும் அவதிப்பட்டனர். மரங்களை அகற் றுவது உள்ளிட்ட பணிகள் போர்க்கால அடிப்படையில் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தென்மேற்கு வங்கக் கடலில் உருவான 'வார்தா' புயல் கடந்த 12-ம் தேதி அதிதீவிர புயலாக மாறி சென்னை மாநகர், புறநகர் பகுதிகளை தாக்கியது.

புயல் காற்றின் வேகத்துக்கு ஈடுகொடுக்க முடியால் சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட் டங்களில் பல்லாயிரக்கணக்கான மரங்கள் வேரோடு சாய்ந்தன. மேலும் ஆயிரக்கணக்கான மரங்களின் கிளைகள் உடைந்து சாலைகள், கட்டிடங்கள், வாகனங் களின் மீது விழுந்து பெரும் சேதத்தை ஏற்படுத்தின. 3 மாவட்டங்களிலும் ஒரு லட்சத்துக்கும் அதிகமான மரங்களை 'வார்தா' புயல் சாய்த்தது.

சாலைகள், தெருக்களில் முறிந்து விழுந்த மரங்களை அகற்றும் பணி வேகமாக நடந்து வருகிறது. சென்னை மாநகராட்சி ஊழியர்கள், காவல், தீயணைப்பு துறையினர், சமூக நல அமைப்புகளை சேர்ந்தவர்கள் மரங்களை அப்பறப்படுத்தும் பணியில் ஈடுபட்டனர்.

சென்னை உட்பட 4 மாவட்டங்களில் 17 ஆயிரம் மின் கம்பங்கள் சாய்ந்தன. 40 கோபுரங்கள், 800 மின்மாற்றிகள் மற்றும் 4500 மின் பகிர்மானப் பெட்டிகள் சேதமடைந்தன. மேலும், 15,000 கி.மீ. உயர்நிலை மின்கம்பிகள் சேதமடைந்துள்ளதாக தமிழக அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் தமிழ்நாடு மின்சார வாரியத்துக்கு ரூ.1000 கோடிக்கு மேல் இழப்பு ஏற்பட்டது.

இந்நிலையில் 'வார்தா' புயல் நிவாரணப் பணிகளுக்கு ரூ.500 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் அறிவித்தார்.

புயல் பாதிப்பு குறித்து மத்திய குழு ஆய்வு செய்ய வேண்டும், நிவாரணப் பணிகளுக்கு ரூ.1000 கோடிக்கும் அதிகமாக நிதி ஒதுக்க வேண்டும் என்று தமிழக தலைவர்கள் மத்திய அரசிடம் வலியுறுத்தி வந்தனர்.

இதைத் தொடர்ந்து தமிழக முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் திங்கட்கிழமை அன்று பிரதமர் மோடியை டெல்லியில் சந்தித்து, தமிழகத்தில் 'வார்தா' புயலினால் ஏற்பட்ட சேதத்திற்கு மத்திய அரசு நிவாரணம் அளிக்கவும் மற்றும் தமிழகம் சார்பாக பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மனுவினையும் அளிக்க உள்ளார்.

இந்த சூழலில் 'வார்தா' புயல் பாதிப்புகளை ஆய்வு செய்ய மத்திய குழு அடுத்த வாரம் தமிழகம் வருகிறது.

மத்திய உள்துறை அமைச்சக இணை செயலர் தலைமையில் குழு வர உள்ளது. இக்குழு சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களை ஆய்வு செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தினகரன்

## மூலிகை உணவு தயாரித்தல் பயிற்சி

பழநி, : பழநி, பழநியாண்டவர் பாலிடெக்னிக் கல்லூரியில் மூலிகை உணவு தயாரித்தல் பயிற்சி நடந்தது. 3 நாட்கள் நடந்த பயிற்சி முகாமிற்கு கல்லூரியின் முதல்வர் கந்தசாமி தலைமை வகித்தார். சமுதாய மேம்பாட்டு பாலிடெக்னிக் திட்டத்தின் அக ஒருங்கிணைப்பாளர் அசோகன் , பழநி நகராட்சி சித்த மருத்துவமனையின் மருத்துவ அதிகாரி ரவி ஆகியோர் நிலவேம்பு குடிநீர் வழங்கும் நிகழ்ச்சியை துவக்கி வைத்தனர். முகாமில் மூலிகை உணவு வகைகளைத் தயாரிக்கும் முறைகள், உண்ணும் முறை, மூலிகை உணவுகளின் நன்மைகள் குறித்து எடுத்துரைக்கப்பட்டன. முகாமில் 1200க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர். ஏற்பாடுகளை பயிற்றுநர் செல்வராஜ் உள்ளிட்டோர் செய்திருந்தனர்.

## இளையான்குடி பகுதியில் கடும் பனிப்பொழிவு

இளையான்குடி, : இளையான்குடி பகுதியில் வழக்கத்தைவிட , நேற்று கடும் பனி பெய்தது. இதனால் சாலைகளில் வாகனங்கள் செல்வதில் சிரமம் ஏற்பட்டது.இளையான்குடி, சாலைக்கிராமம் பகுதியில் நேற்று காலை முதல் கடும் பனிபெய்யத் தொடங்கியுள்ளது. அடைமழை பெய்ய வேண்டிய ஐப்பசியில் , வெறும் தூறல் மட்டும் பெய்தது. அடுத்து வந்த கார்த்திகையில் மழை பெய்யும் என ஏங்கிய

விவசாயிகளுக்கு வாடைக்காற்று மட்டுமே கிடைத்து.மார்கழியில் மரம் குளிர மழை பெய்யும் என நம்பிய விவசாயிகளுக்கு அதிலும் இடி விழுந்துள்ளது. ஏனெனில் , கடுமையான பனி பெய்கிறது. இளையான்குடி, சாலைக்கிராமம், சூராணம், தாயமங்கலம், முனைவென்றி ஆகிய பகுதிகளில் நேற்று காலை முதல் கடும் பனிபெய்யத் தொடங்கியுள்ளது. இதனால் இளையான்குடியிலிருந்து பரமக்குடி , காளையார்கோயில், சிவகங்கை ஆகிய சாலைகளிலும் சாலைக்கிராமம் பகுதியில் சூராணம், ஆர்எஸ் மங்கலம், கிளாஞ்சுனை ஆகிய சாலைகளில் வாகனங்கள் செல்வதில் சிரமம் ஏற்பட்டுள்ளது. மேலும் அதிகாலை செல்லும் வாகனங்கள் மஞ்சள் விளக்குகளை எரியவிட்டு செல்லுமாறு டிரைவர்களுக்கு இளையான்குடிகாவல்துறை சார்பில் அறிவுறுத்தப்பட்டுள்ளது

## திருப்புத்தூர் அருகே கரும்பு, மஞ்சள் பொங்கலுக்கு தயார்

திருப்புத்தூர், : திருப்புத்தூர் அருகே நைனார்புரத்தில் உள்ள ஒரு தோட்டத்தில் பொங்கல் பண்டிகைக்கு கரும்பு மற்றும் மஞ்சள்கிழங்கு தயாராகி உள்ளது. பொங்கல் பண்டிகையென்றாலே கரும்பும் , மஞ்சள் கிழங்கும் ஞாபகத்திற்கு வந்து விடுகிறது. இனிப்பான பொங்கலுடன் திகட்டாத கரும்பின் சுவை மகிழ்வூட்டி வருகிறது. அதே போல பொங்கல் பானையில் மஞ்சள் கிழங்கு கட்டப்பட்டு அதன் பின்பே பொங்கப்படுகிறது.

திருப்புத்தூர் பகுதிகளில் பல இடங்களில் மஞ்சள் பயிர் செய்யப்பட்டுள்ளது. திருப்புத்தூர் அருகே நைனார்புரத்தில் கடந்த 3 மாதத்திற்கு முன் பொங்கல் பண்டிகைக்கு அறுவடை செய்வதற்காக கரும்பு மற்றும் மஞ்சள்கிழங்கு பயிர் செய்யப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு போதிய மழை பெய்யாததால் பெரிய அளவில் விவசாயம் செய்யவில்லை. ஒரளவிற்கு கிணறு மற்றும் ஆழ்குழாய்களில் உள்ள தண்ணீரை நம்பி சிலர் மட்டும் கரும்பு மற்றும் மஞ்சள்கிழங்கை விவசாயம் செய்துள்ளனர். இதிலும் போதிய மழை இல்லாததால் நிலத்தடி நீரும் அடியில் சென்றுவிட்டது. இந்நிலையில் ஆழ்குழாய்யின் மூலம்

தினந்தோறும் தண்ணீர் பாய்ச்சி பொங்கலுக்கு அறுவடை செய்வதற்காக மஞ்சள் மற்றும் கரும்பு தயார் நிலையில் வைத்துள்ளனர்.

## பணத்தட்டுப்பாடு படுத்தும்பாடு விலை போகாமல் தேங்கும் காய்கறிகள் விரக்தியின் பிடியில் விவசாயிகள், வியாபாரிகள்

சிவகங்கை, : சிவகங்கை மாவட்டத்தில் ரூ. 500, ரூ.1000 நோட்டுக்கள் செல்லாது என்ற அறிவிப்பால் ஏற்பட்டுள்ளபணத்தட்டுப்பாட்டால் காய்கறிகளுக்கு விலை போகாத நிலை ஏற்பட்டுள்ளது. கடந்த நவ. 8ம் தேதி இரவு புழக்கத்தில் இருந்த ரூ. 500, ரூ.1000 நோட்டுகள் செல்லாது என அறிவிக்கப்பட்டது. இதையடுத்து ஏற்பட்ட பணத்தட்டுப்பாடு உள்ளிட்ட பல்வேறு குழப்பங்களால் பொதுமக்கள் கடும் பாதிப்படைந்து வருகின்றனர். ஏடிஎம் மையங்கள் நிரந்தரமாக முடக்கப்பட்டுள்ளன. சில மையங்கள் , சில மணி நேரங்கள் மட்டுமே செயல்பட்டு வருகின்றன.

அப்படி செயல்படும் ஏடிஎம் மெஷின்களில் ஒரு கார்டுக்கு ரூ. 2 ஆயிரம் மட்டுமே கிடைக்கிறது. புதிய ரூ. 500 தாள்கள் சிவகங்கை மாவட்டத்தில் இதுவரை 10சதவீத அளவில் மட்டுமே புழக்கத்தில் உள்ளன. இந்த குழப்பங்களால் பொதுமக்கள் செலவுக்கு கூட பணம் இல்லாமல் கடந்த 40 நாட்களாக தொடர்ந்து அவதிக்குள்ளாகி வருகின்றனர். செயல்படும் சில ஏடிஎம்களில் கிடைக்கும் ரூ. 2 ஆயிரம் பணத்தை எடுக்க அதிகாலை 4 மணி, 5 மணிக்கெல்லாம் ஏடிஎம்களுக்கு செல்ல வேண்டிய நிலை உள்ளது.

தற்போது வரை வங்கிகளில் நீண்ட வரிசை இருப்பதால் முதியோர் , பெண்கள், குழந்தைகள் தவித்து வருகின்றனர். இந்நிலையில் கார்த்திகை , மார்கழி மாதங்களில் ஐயப்பன் மற்றும் பழனி முருகளுக்கு விரதமிருப்பதால் பெரும்பாலான குடும்பங்கள் இந்த காலகட்டங்களில் சைவத்திற்கு மாறிவிடுவர். இதனால் ஆண்டுதோறும் இம்மாதங்களில் காய்கறி விலை அதிகப்படியாக இருக்கும். ஆனால் தற்போது பணத்தட்டுப்பாட்டால்

காய்கறிகள், பொருட்கள் வாங்குவது குறைந்துள்ளது. இதனால் காய்கறிகளும் எதிர்பார்த்த அளவில் விற்பனை இல்லை. இதனால் ஏதோ விற்பனை செய்தால் சரி என்ற நிலைக்கு வியாபாரிகளும், விவசாயிகளும் தள்ளப்பட்டுள்ளனர்.

சிவகங்கை மாவட்டத்தில் கிராமங்களை சேர்ந்தவர்கள் அதிகமாக காய்கறி விளைச்சல் செய்து நேரடியாக அவர்களே உழவர் சந்தை , வாரச்சந்தைகள், நகரின் முக்கிய பகுதிகளில் விற்பனை செய்வார்கள். இந்நிலையில் தற்போது சரிவர விற்பனை இல்லாததால் மிகக்குறைந்த விலைக்கு விற்பனை செய்ய வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். ஒரு கிலோ தக்காளி ரூ. 10, வெங்காயம் ரூ. 15, வெண்டை ரூ. 25, கத்தரி ரூ.40, காரட் ரூ.20, பீட்ரூட் ரூ.10, முள்ளங்கி ரூ.10, அவரை ரூ.30 என விற்பனை செய்யப்படுகிறது. இதனால் விவசாயிகளுக்கு அதிகப்படியான இழப்பு ஏற்படுகிறது.

இம்மாதங்களில்தான் தோட்ட காய்கறிகள் விளைச்சல் அதிகமிருக்கும். மற்ற மாதங்களில் அதிகமாக விளைச்சல் செய்ய முடியாது. இம்மாதங்களில் காய்கறி பயன்பாடும் அதிகமிருக்கும் என்பதால் விலையும் கூடுதலாக கிடைக்கும். ஆனால் தற்போது பணப்பிரச்னையால் காய்கறிகள் விற்பனையாகாமல் தேங்கியுள்ளன. விற்பனை செய்யாமல் இருந்தாலும் செடிகளிலேயே அழுகி வீணாக போகும் என்பதால் வேறு வழியின்றி குறைந்த விலைக்கு விற்பனை செய்து வருகிறோம். இந்த விற்பனையால் லாபம் இல்லை இழப்புதான் ஏற்படும்.இதுகுறித்து வியாபாரிகள் கூறியதாவது: வாங்கி வரும் விலை, போக்குவரத்து செலவு என இவைகளுடன் நமக்கான சம்பளம் கிடைத்தால் மட்டும் கூட போதும் என விற்பனை செய்து வருகிறோம். தொடர்ந்து காய்கறி வியாபாரம் செய்துவிட்டு திடீரென வேறு வேலைக்கு செல்ல முடியாது. பணப்பிரச்னையால் கடை வீதிகள் , சந்தைகளில் ஆட்கள் நடமாட்டமே இல்லாமல் உள்ளது. இதனால் மிகக்கடுமையாக பாதிக்கப்பட்டு வருகிறோம் என்றனர்.

## அமராவதி அணை நீர்மட்டம் சரிகிறது பாசன பகுதிகளில் கருகும் நெல் பயிரை காப்பாற்ற முடியாமல் விவசாயிகள் கவலை

உடுமலை, : அமராவதி அணை நீர்மட்டம் சரிந்ததால் நெற் பயிர் கருகும் அபாயத்தில் உள்ளது. அதை காப்பாற்ற அணையில் இருந்து தண்ணீர் திறந்து விட வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.அமராவதி அணையால் திருப்பூர் , கரூர் மாவட்டங்களில் 54 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. கல்லாபுரம் , ராமகுளம் ராஜவாய்க்கால்கள் நேரடி பாசனத்தில் உள்ளன. இங்கு 3,500 ஏக்கர் நிலம் உள்ளது. இதில் பழைய ஆயக்கட்டு பாசனத்துக்கு அமராவதி ஆற்றில் தண்ணீர் திறக்கப்படுகிறது. மடத்துக்குளம் தொகுதியில் உள்ள குமரலிங்கம் , சர்க்கார் கண்ணாடிப்புத்தூர், சோழமாதேவி, கடத்தூர், கணியூர், காரத்தொழுவு ஆகிய வாய்க்கால் பாசனத்தில் உள்ள 7,500 ஏக்கர் பாசனத்துக்கும் , கல்லாபுரம், ராமகுளம் பாசனத்தில் 3,500 ஏக்கர் பாசனத்துக்கும் கடந்த ஆகஸ்ட் 21ம் தேதி தண்ணீர் திறக்கப்பட்டது. அனைத்து பகுதிகளிலும் விவசாயிகள் நெல் சாகுபடி செய்துள்ளனர். தொடர்ந்து நீர்திறப்பால் 90 அடி நீர்மட்டம் கொண்ட அணை நீர்மட்டம் சரிந்து கொண்டிருக்கிறது. நேற்றைய நிலவரப்படி 35 அடி தண்ணீர் இருந்தது. அதில் 15 அடிக்கு சேறும் , சகதியும் உள்ளது. மழை பெய்யாவிட்டால் தொடர்ந்து தண்ணீர் திறக்கப்படுவது சந்தேகம் தான். இதனால், நெல் விளைந்து அறுவடை நடக்குமா என்றகேள்வி எழுந்துள்ளது. ராமகுளம் பாசனத்தில் 100 ஏக்கரில் நெற் பயிர் பால் பிடித்து காணப்படுகிறது. அதேபோல் , குமரலிங்கம் வாய்க்கால் பாசனத்தில் கீழ்மடை பாசன வயல்களுக்கு இன்னும் தண்ணீர் தேவைப்படுகிறது. எனவே , அணையில் இருந்து தண்ணீரை திறக்க வேண்டுமென்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## 760 டன் யூரியா மூட்டை விருத்தாசலம் வந்தது

விருத்தாசலம், : விருத்தாசலத்திற்கு சென்னையிலிருந்து ரயில் மூலம் 760டன் யூரியா நேற்று வந்தது.கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் தற்போது குறுவை சாகுபடிகள் முடிவடைந்து , சம்பாநெல் சாகுபடியை தொடங்கியுள்ளனர். மேலும் கரும்பு , மணிலா உள்ளிட்ட பயிர்களை விவசாயிகள் சாகுபடி செய்ய ஆரம்பித்துள்ளனர். விவசாயிகளுக்கு தேவையான உரங்கள் தட்டுப்பாடின்றி கிடைக்கும் வகையில் மாவட்ட நிர்வாகம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இதற்காக தூத்துக்குடி , சென்னை, ஆந்திரா, ஒரிசா உள்ளிட்ட பல்வேறு இடங்களிலிருந்து யூரியா , உரங்களை இறக்குமதி செய்து வருகிறது.இந்நிலையில் சென்னையில் உள்ள ஸ்பிக் நிறுவனத்தில் இருந்து நேற்று 760 டன் யூரியா விருத்தாசலம் ரயில் நிலையத்திற்கு வந்தது. இந்த உரமூட்டைகளை அங்கிருந்த பணியாளர்கள் லாரிகளில் ஏற்றி கடலூர் , விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் உள்ள தனியார் உரக்கடைகளுக்கு அனுப்பி வைத்தனர்.

## போதிய மழை இல்லை ; தண்ணீரையும் திறக்கவில்லை பல ஆயிரம் ஏக்கர் பயிர்கள் கருகியது

புவனகிரி, : காவிரி டெல்டா பாசனத்தின் கடைமடை பகுதியாக விளங்குவது புவனகிரி மற்றும் சிதம்பரம் தாலுகா பகுதிகள். சுமார் 44 ஆயிரம் ஏக்கர் விளை நிலங்கள் இப்பகுதியில் உள்ள வீராணம் ஏரியில் இருந்து பாசனம் பெறுகிறது. காவிரி , மேட்டூர், கல்லணை, கீழணை போன்றவற்றில் இருந்து போதிய தண்ணீர் திறக்கப்படாததால் , இப்பகுதி பாசனத்தின் நீர் ஆதாரமான வீராணம் ஏரிக்கு தண்ணீர் வரவில்லை. அதனால் தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டு பாசனத்திற்காக ஏரியில் இருந்து தண்ணீர் திறக்கப்படவில்லை. இதனால் விவசாயம் அழிந்து விட்டதாக குற்றம் சாட்டுகின்றனர்

பரங்கிப்பேட்டை மற்றும் புவனகிரி பகுதி விவசாயிகள். வழக்கமாக தென்மேற்கு பருவ மழை, வட கிழக்கு பருவ மழை மற்றும் வீராணம் ஏரியில் இருந்து திறக்கப்படும் தண்ணீர் ஆகியவற்றால் இப்பகுதிகளில் விவசாயம் செழிக்கும். ஆனால் இந்த ஆண்டு தென்மேற்கு பருவ மழை விவசாயிகளை ஏமாற்றிட , வட கிழக்கு பருவ மழையும் கை கொடுக்கவில்லை. இந்த நேரத்தில் விவசாயிகள் , தங்களின் ஒரே நீர் ஆதாரமாக நம்பி இருந்த வீராணம் ஏரி தண்ணீரும் கிடைக்கவில்லை.

மனம் தளராத விவசாயிகள் தண்ணீரை காசு கொடுத்து வாங்கி விவசாய பணிகளை மேற்கொண்டிருந்தனர். ஆனால் அதன் பின்னரும் மழை பெய்யவில்லை. இதனால் தண்ணீர் இல்லாமல் பயிர்கள் காய்ந்து கருக துவங்கியது. பரங்கிப்பேட்டை அருகே உள்ள தீர்த்தாம்பாளையம் , கணக்கன்பாளையம், பு.முட்லூர், அரியகோஷ்டி, அகரம், புவனகிரி அருகே உள்ள வடக்குத்திட்டை , தெற்குத்திட்டை, மேலமணக்குடி உள்ளிட்ட பல்வேறு கிராமங்களில் பல ஆயிரம் ஏக்கர் நிலங்களில் நெற்பயிர்கள் காய்ந்து விட்டது. கீரப்பாளையம் ஒன்றியத்தில் உள்ள கண்ணங்குடி, எண்ணநகரம், சாக்காங்குடி உள்ளிட்ட பல்வேறு கிராமங்களும் வறட்சிக்கு தப்பவில்லை. இதனால் அதிர்ச்சியில் விவசாயிகள் செய்வதறியாது திகைத்து உள்ளனர்.

வயலில் காய்ந்து கருகி உள்ள பயிர்களை வைத்து எதையும் செய்ய முடியாது என்பதால் வேறு வழியின்றி மனிதர்களுக்கு கிடைக்காத நெல் , மாட்டுக்காவது உணவாக கிடைக்கட்டும் என நினைத்து கனத்த இதயத்துடன் விவசாயிகள் வயல்களில் மாடுகளை விட்டு மேய்த்து வருகின்றனர். இதனால் நிலமும் சுத்தமாகும் என்பது இப்பகுதி விவசாயிகளின் எண்ணமாக உள்ளது.

நேரடி விதை விதைத்த வயல் , நாற்று பிடுங்கி நட்ட வயல் , நாற்றங்கால் என வஞ்சனை இல்லாமல் எல்லா வயல்களும் காய்ந்து கருகியதால் விரக்தியின் விளிம்பில் இருக்கின்றனர் இப்பகுதி விவசாயிகள்.

வயல்களில் பயிர்களை கால்நடைகள் மேயும் அளவிற்கு ஏற்பட்டுள்ள வறட்சியால் இந்த ஆண்டு விவசாயம் பொய்த்து போனது. அதனால் இந்த ஆண்டு உணவு தானிய உற்பத்தி கணிசமாக குறையும் என வேளாண் வல்லுநர்கள் கணக்கிட்டுள்ளனர். இந்நிலையில் வறட்சிக்கு அரசு நிவாரணம் தருமா என விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

நெற்பயிர்களுக்கு காப்பீடு செய்துள்ள விவசாயிகள் முழு அளவில் காப்பீடு கிடைக்குமா என ஆராய துவங்கி உள்ளனர். காப்பீடு திட்டத்தின்கீழ் பயிர்களுக்கு செய்துள்ள காப்பீட்டு தொகையை பெறுவதற்கு பல்வேறு விதிமுறைகள் உள்ளன. இந்த விதிமுறைகள் எல்லாம் பெரும்பாலும் விவசாயிகளுக்கு எதிராகவே உள்ளது. அதனால் எப்படி காப்பீடு தொகை பெறுவது என விவசாயிகள் கவலையில் உள்ளனர்.

## நாமக்கல் மாவட்டத்தில் பயிர் அறுவடை பரிசோதனையை மேற்கொள்ள ஆட்கள் நியமனம் விண்ணப்பிக்க அழைப்பு

நாமக்கல் : நாமக்கல் மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டுள்ள பிரதமரின் பயிர் காப்பீட்டு திட்டத்தின் கீழ் , பயிர் அறுவடை பரிசோதனையை மேற்கொள்ள தகுதிவாய்ந்த பணியாளர்கள் தற்காலிக ஒப்பந்த அடிப்படையில் தேர்வு செய்யப்பட உள்ளனர்.

இதுகுறித்து கலெக்டர் ஆசியாமரியம் வெளியிட்டுள்ள அறிக்கை:நாமக்கல் மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டுள்ள பிரதமரின் பயிர் காப்பீட்டு திட்டத்தின் கீழ் , பயிர் அறுவடை பரிசோதனைகளை மேற்கொள்ள தகுதிவாய்ந்த பணியாளர்கள் தற்காலிக ஒப்பந்த அடிப்படையில் தேர்வு செய்யப்பட உள்ளனர். பணித்தேர்வு முகமை மூலம் நிரப்பிட திட்டமிடப்பட்டுள்ளது. குறைந்தபட்சம் 3 ஆண்டுகள் அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.வேளாண் சார்ந்த இளநிலை பட்டப்படிப்பு , பட்டய படிப்புடன் கணினி இயக்கம் திறன் பெற்றிருக்க வேண்டும். மேலும் வேளாண்மைத்துறை மற்றும் புள்ளியியல் துறையில் பணிபுரிந்து , ஓய்வு பெற்ற அலுவலர்களும் தேர்வு செய்ய பரிசீலிக்கப்படுவர். மேற்கண்ட பணியிடங்கள் யாவும் , தொகுப்பூதிய அடிப்படையில் பணியமர்த்தப்பட உள்ளது. மாதாந்திர தொகுப்பூதியமாக ₹ 10,000 வீதம், பணித்தேர்வு முகமை மூலம்

வழங்கப்படும். எனவே பணி நியமன முகமைகள் , தகுதி வாய்ந்த பணியாளர்களை தேர்வு செய்து வழங்கலாம். அத்துடன் முகமையின் அடிப்படை விவரங்கள் , அனுபவம் மற்றும் ஒப்பந்த பணியாளர்களை வழங்க சேவை கட்டணம் உள்ளிட்ட விவரங்களை கீழ்க்கண்ட முகவரிக்கு வரும் 22ம் தேதி மாலை 5 மணிக்குள் விண்ணப்பிக்க வேண்டும். வேளாண்மை இணை இயக்குநர் , மாவட்ட கலெக்டர் அலுவலக கட்டட வளாகம் பின்புறம், சிலுவம்பட்டி (அஞ்சல்) , நாமக்கல் மாவட்டம்- 637003 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## பிரதமரின் பயிர் காப்பீடு திட்டத்தில் பணியாளர்கள் தேர்வு 22ம் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம்

ஈரோடு, : பிரதமரின் பயிர் காப்பீடு திட்டத்தின்கீழ் தொகுப்பூதியத்தின் அடிப்படையில் பணியாளர்கள் தேர்வு செய்யப்படவுள்ளதால் , பதிவுத்துறையில் பதிவு பெற்ற வேலைவாய்ப்பு முகமைகள் டிச. 22-ம் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம் என வேளாண் துறை அறிவித்துள்ளது.இது குறித்து ஈரோடு மாவட்ட வேளாண் இணை இயக்குநர் இராம.சுப்பிரமணியன் வெளியிட்ட செய்தி:

ஈரோடு மாவட்டத்தில் செயல்படுத்தப்படும் பிரதமரின் பயிர் காப்பீட்டு திட்டத்தின் கீழ் பயிர் அறுவடை பரிசோதனைகளை மேற்கொள்ள தகுதிவாய்ந்த பணியாளர்களை தற்காலிக ஒப்பந்த அடிப்படையில் நிரப்ப திட்டமிடப்பட்டுள்ளது. குறைந்தபட்சம் 3 ஆண்டுகள் அனுபவம் பெற்றிருக்க வேண்டும். ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிய உள்ள பணியாளர் பயிர் அறுவடை பரிசோதனை , தேர்வுப்பணி, அறுவடைப்பணி மற்றும் அதைச் சார்ந்த பணிகளை மேற்கொள்ள வேளாண்மை மற்றும் வேளாண் சார்ந்த இளநிலை பட்டப்படிப்பு , பட்டயப்படிப்புடன் கணினி இயக்கும் திறன் பெற்றிருக்க வேண்டும்.மேலும், வேளாண்துறை மற்றும் புள்ளியியல் துறையில் பணிபுரிந்து

இப்பணியை மேற்கொள்ள ஆர்வமுள்ள ஓய்வு பெற்ற அலுவலர்களும் தேர்வு செய்ய பரிசீலிக்கப்படுவார்கள். இப்பணியிடங்கள் அனைத்தும் தொகுப்பூதிய அடிப்படையில் நிரப்பப்பட உள்ளது. தேர்ந்தெடுக்கப்படும் பணியாளர்களுக்கு மாதாந்திர தொகுப்பூதியமாக ரூ. 10,000 வீதம் பணித்தேர்வு முகமை மூலம் வழங்கப்படும். எனவே , இப்பணியினை மேற்கொள்ள தகுதி வாய்ந்தவர்கள் டிச. 22-ம் தேதி மாலை 5 மணிக்குள் விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பங்களை மாவட்ட ஆட்சியர் , ஈரோடு மாவட்டம் , ஈரோடு-638 011 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

## நீர் வள பாதுகாப்பு நிலையம் சார்பில் பழங்குடியின விவசாயிகளுக்கு விவசாய உபகரணங்கள்

ஊட்டி, : கோழிக்கரை கிராமத்தில் உள்ள பழங்குடியின விவசாயிகளுக்கு மண் மற்றும் நீர் வள பாதுகாப்பு நிலையம் சார்பில் விவசாய உபகரணங்கள் வழங்கப்பட்டது. கோத்தகிரி அருகே கோழிக்கரை பழங்குடியின கிராமத்தில் ஊட்டியில் உள்ள இந்திய மண் மற்றும் நீர்வள பாதுகாப்பு நிலையத்தின் சார்பில் பழங்குடியின விவசாயிகள் மற்றும் சுய உதவி குழுக்களுக்கு விவசாய விழிப்புணர்வு ஏற்படுத்துதல் மற்றும் மத்திய அரசு சார்பில் விவசாய உபகரணங்கள் வழங்கும் விழா நடந்தது. மண்ணில் ஏற்படும் குறைகளால் பயிருக்கு ஏற்படும் தீங்குகள், மண்ணில் சத்து குறைபாட்டால் பயிர் விளைச்சல் குறைதல் மற்றும் அமில மண்ணில் சுண்ணாம்பு இடுவதன் முக்கியத்துவம் , மண் அரிப்பை தடுத்தல், மழைநீர் சேகரிப்பு குறித்து விளக்கப்பட்டது. ஆராய்ச்சி மைய தலைவர் கோலா , பழங்குடியின மக்களுக்கு விவசாய உபகரணங்களை வழங்கி பேசினார். மண் மற்றும் நீர் வள ஆராய்ச்சி மையத்தின் மூலம் பழங்குடியின மக்களுக்கு கிடைத்துள்ள நன்மைகள் குறித்து நீலகிரி ஆதிவாசிகள் நலச்சங்க கள ஒருங்கிணைப்பாளர் பாலசுப்பிரமணியன் பேசினார். மண் மாதிரிகள் எவ்வாறு எடுக்க வேண்டும் என செயல்முறை விளக்கம் அளிக்கப்பட்டது. விவசாயிகளின் சந்தேகங்களுக்கு பதிலளிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் நீர் மற்றும் மண் வள பாதுகாப்பு

மைய விஞ்ஞானிகள் ராஜன் , கண்ணன், சுந்தராம்பாள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## உறைபனியால் பசுந்தேயிலை விலை சரிவு விவசாயிகள் கவலை

குன்னூர், : நீலகிரி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக காலநிலை மாற்றத்தால் உறைபனியின் தாக்கம் அதிகரித்துள்ளது. இதனால் தேயிலை செடிகள் கருகுகின்றன. இதனால் ஏல மையங்களுக்கு தேயிலை தூளின் வரத்து கணிசமாக குறைந்துள்ளது. ஏற்கனவே ரூபாய் நோட்டு தட்டுப்பாட்டால் ஏல மையங்களில் தேயிலை தூள் விலை குறைந்துள்ளது. கடந்த சில வாரங்களாக தேயிலை மையங்களில் தேயிலை தூள் விலை அதிகரித்தாலும் பசுந்தேயிலை விலை குறைத்து வழங்கப்படுகிறது. இதன்படி பசுந்தேயிலை கிலோ ஒன்றுக்கு ரூ. 14 முதல் ரூ.15 வரையும், நடுத்தரம் ரூ.18 முதல் ரூ.19 வரையும், உயர் ரகம் ரூ. 22 முதல் ரூ.23 வரையும் வழங்கப்பட்டுள்ளது. தற்போது பெய்த மழையால் தேயிலை மகசூல் அதிகரிக்க கூடும் என எதிர்பார்த்தாலும் கூட தொடர்ந்து உறை பனியின் தாக்குதல் அதிகரிக்க வாய்ப்புள்ளதால் மகசூல் குறைந்து வருவாய் இழப்பு ஏற்படும் என விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

## பொங்கல் பண்டிகைக்காக துபாய் , மலேசியா செல்லும் மேலூர் மஞ்சள் அறுவடைக்கு தயார்

மேலூர், : மேலூர் பகுதியில் நடவு செய்துள்ள மஞ்சள் கிழங்கு பொங்கல் தினத்தை எதிர்பார்த்து காத்துக் கொண்டுள்ளது. இவை பல்வேறு மாவட்டங்களை தாண்டி வெளி நாடுகளுக்கும் அனுப்பி வைக்கப்படுகிறது.பொங்கல் என்றால் முதலில் நினைவுக்கு வருவது கரும்பு. இதனை தொடர்ந்து பொங்கலுக்கு தேவைப்படும் முக்கிய பொருள் மங்களகரமான மஞ்சள் கிழங்கு தான். இது மேலூர் பகுதியில் சருகுவலையபட்டி , கொங்கம்பட்டி, குறிச்சிப்பட்டி பகுதியில் பல ஏக்கர்களில் பயிர் செய்யப்படுகிறது. இவை பொங்கலுக்கு முன்பாக தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்கள் , ஆந்திரா, மும்பை

மற்றும் துபாய் , மலேசியா போன்ற வெளிநாடுகளுக்கு இங்கிருந்து அனுப்பி வைக்கப்படுகிறது. சருகுவலையபட்டியை சேர்ந்த அய்யனார் கூறுகையில் , ‘‘உணவு மஞ்சள் உற்பத்தி செய்ய ஒரு வருடமாகும். இதில் 7 அல்லது 8 மாதத்தில் பிடுங்கப்படுவதே பொங்கலுக்கு பயன்படும் பிஞ்சு மஞ்சளாகும். ஏக்கருக்கு ரூ. 60 ஆயிரம் வரை செலவு ஆகும். நல்ல விலை இருந்தால் ஏக்கர் ஒன்றரை லட்ச ரூபாய் வரைக்கும் விற்பனை ஆகும். எங்களிடம் கொத்து மஞ்சளை ரூ. 7 முதல் ரூ.10 வரை வாங்கி செல்லும் வியாபாரிகள், அதை ரூ.25 முதல் ரூ.40 வரை பொதுமக்களிடம் விற்பனை செய்கிறார்கள். மதுரை மட்டுமல்லாது பல்வேறு மாவட்டங்களுக்கும் இங்கிருந்து மஞ்சள் அனுப்பி வைக்கப்படுகிறது. கடந்த வருடம் துபாய் மற்றும் மலேசியாவிற்கு இங்கிருந்து மஞ்சள் வாங்கி அட்டை பெட்டிகளில் பேக் செய்து அனுப்பப்பட்டது ’’ என்றார். மொத்தத்தில் பொங்கலை வரவேற்க மேலூர் மஞ்சள் தயாராகி வருகிறது.

## பயிர்அறுவடை பரிசோதனைகளுக்கு தற்காலிக பணியாளர்கள் நியமனம்

ராமநாதபுரம், : ராமநாதபுரம் மாவட்டத்தில் பயிர் அறுவடை பரிசோதனைகள் மேற்கொள்ள தகுதி வாய்ந்த பணியாளர்கள் தற்காலிக ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட உள்ளதாக கலெக்டர் நடராஜன் தெரிவித்தார்.இதுகுறித்த அவரது அறிக்கை, ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிய உள்ள பணியாளர் பயிர் அறுவடை பரிசோதனைகளின் தேர்வுப்பணி , அறுவடைப்பணி மற்றும் அது சார்ந்த பணிகளை மேற்கொள்ள வேளாண்மை மற்றும் வேளாண் சார்ந்த இளநிலை பட்டப்படிப்பு அல்லது பட்டப்படிப்புடன் கனிணி இயக்கம் திறன் பெற்றிருக்க வேண்டும். வேளாண்மைத் துறை மற்றும் புள்ளியியல் துறையில் பணிபுரிந்து இப்பணியை மேற்கொள்ள ஆர்வமுள்ள ஓய்வு பெற்ற அலுவலர்களும் தேர்வு செய்ய பரிசீலிக்கப்படுவர்.

இந்த பணியிடங்கள் அனைத்தும் தொகுப்பூதிய அடிப்படையில் நிரப்பப்படும். தேர்ந்தெடுக்கப்படும் பணியாளர்களுக்கு மாதாந்திர தொகுப்பூதியமாக ரூ. 10 ஆயிரம்-

வழங்கப்படும். தகுதி வாய்ந்த நபர்கள் வேளாண்மை இணை இயக்குநர் , வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகம் , கலெக்டர் அலுவலக வளாகம் , ராமநாதபுரம் என்ற முகவரிக்கு வரும் 22ம் தேதி மாலை 5 மணிக்குள் விண்ணப்பிக்கலாம் என்றார்.

## மிளகாய் செடிகளுக்கு களை எடுக்கும் பணி

ஆர்.எஸ்.மங்கலம், : ஆர்.எஸ்.மங்கலம் பகுதியில் விவசாயிகள் தற்போது மிளகாய் செடிகளுக்கு களை எடுக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். மாவட்டத்தில் இந்த வருடம் பருவ மழை சரியாக பெய்யாததால் நெல்பயிர் விவசாயம் முற்றிலுமாக பாதிக்கப்பட்டது. பல ஆயிரம் ருபாய் செலவு செய்தும் பலன் இல்லாமல் செங்குடி , பூலாங்குடி, வண்டல், வரவனி, அரியாங்கோட்டை போன்ற பகுதி விவசாயிகள் மிளகாய் சாகுபடி செய்தனர். இதற்கு ஓரளவு தண்ணீர் போதும் என்பதால் , பலர் மிளகாய் விவசாயத்தில் ஈடுபட்டனர்.

இதற்காக முதல் கட்ட பணியான களை எடுக்கும் பணியில் தற்போது விவசாயிகள் மும்முரமாக இறங்கியுள்ளனர்.இதுகுறித்து விவசாயி சரவணன் கூறியது , இந்தாண்டு மழை பெய்யாததால் , நெல்பயிர் பலன் தாவில்லை.அதனால் மிளகாள் செடி நட்டுள்ளோம். இதுவாவது பலன் கொடுக்குமா என தெரியவில்லை என கவலையுடன் கூறினார்.

## மழை குறைந்துள்ளதால் சிறுதானிய பயிர்களை சாகுபடி செய்யலாம் வேளாண் அதிகாரி ஆலோசனை

பரமக்குடி, : நயினார்கோவில் பகுதிகளில் நெல் மற்றும் மிளகாய் விவசாயத்திற்கு போதுமான மழை இல்லாததால் , சிறுதானியங்களை பயிரிடலாம் என வேளாண்மை அதிகாரி தெரிவித்துள்ளார்.பருவமழை பொய்த்ததால் , மாவட்டத்தில் உள்ள அனைத்து விவசாய நிலங்களிலும் பயிரிடப்பட்ட நெல் , மிளகாய் செடிகள் தண்ணீர் இல்லாமல்

கருகி விட்டது. இதனால் விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளனர். ஆகையால் விவசாயிகள் மாற்று விவசாயத்தில் ஈடுபட வேண்டும் என்று நயினார்கோவில் வேளாண் அதிகாரி சித்ரலேகா கூறினார்.

இந்தாண்டு மழை குறைந்துள்ளதால் , நயினார்கோவில் வட்டாரத்தில் சிறுதானியம் மற்றும் பயிர் வகைகளை சாகுபடி செய்யலாம்.

செம்மண் மற்றும் செம்மண் கலந்த வண்டல் மண் பகுதிகளில் , கோழ்வரகு, கம்பு, சோளம் போன்ற சிறுதானியங்களும் , உளுந்து, பாசிப்பயறு, தட்டைப்பயறு வகைகளை சாகுபடி செய்யலாம். ஏக்கருக்கு இரண்டு மெட்ரிக் டன் விளைச்சல் தரும் உளுந்தில் வம்பன் 5, பாசிப்பயறில் கோ 6. தட்டைப்பயரில், பி 152,கோ 7 ரகங்களை பயன்படுத்தி சாகுபாடி செய்யலாம் என தெரிவித்துள்ளார்.

தினமலர்

உண்மையின் உரைகல்

**சிறுதானிய சாகுபடி மதிப்பு கூட்டல் பயிற்சியில் சேர விண்ணப்பிக்கலாம்**

திருவண்ணாமலை: 'திருவண்ணாமலை அருகே, அத்தியந்தல் சிறுதானிய மகத்துவ மையத்தில், சிறுதானிய சாகுபடி மற்றும் மதிப்பு கூட்டுதல் பற்றிய, ஆறு மாத பயிற்சி வகுப்பு நடைபெற உள்ளது' என, சிறுதானிய மகத்துவ மைய தலைவர் பரசுராமன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து, அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: அத்தியந்தல் கிராமத்தில் உள்ள சிறுதானிய மகத்துவ மையத்தில், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக திறந்தவெளி மற்றும் தொலைதூர கல்வி இயக்ககம் மூலம், சிறுதானிய சாகுபடி மற்றும் மதிப்பு கூட்டுதல் பற்றிய, ஆறு மாத கால சான்றிதழ் வகுப்புகள் துவங்கப்பட உள்ளன. இதற்கான கல்வி தகுதி, ஆறாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். ஆறு மாதம் நடைபெறும் பயிற்சிக்கான சேர்க்கை கட்டணம், 1,500 ரூபாய். தமிழ்மொழியில்

பாடங்கள் பயிற்றுவிக்கப்படும். பயிற்சியில் சேர, 18 வயது பூர்த்தி அடைந்திருக்க வேண்டும். பயிற்சி வகுப்புகள், மாதம் ஒரு வகுப்பு வீதம் சனிக்கிழமை நடக்கும். பயிற்சிக்கு பின் சான்றிதழ் வழங்கப்படும். பயிற்சி வகுப்புக்கான விண்ணப்பங்கள், அத்தியந்தலில் உள்ள சிறுதானிய மகத்துவ மையத்தில் வழங்கப்படுகிறது. மேலும், ஆன்லைன் மூலமாக, தமிழ்நாடு வேளாண்மை பல்கலை திறந்தவெளி மற்றும் தொலை தூர கல்வி இயக்ககம் மூலமாகவும் விண்ணப்பிக்கலாம். பயிற்சியில் சேர விரும்புவோர், பாஸ்போர்ட் அளவு புகைப்படத்துடன் நேரடியாக அத்தியந்தலில் உள்ள சிறுதானிய மகத்துவ மையத்திற்கு வந்து பூர்த்தி செய்து கொடுக்கலாம். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

**விளைச்சல் குறைவால் அரிசி விலை உயர்வு! வெளி மாநிலத்திலிருந்து வரத்து குறைந்தது**

கடலூர்: பருவமழை பொய்த்ததால் நெல் விளைச்சல் கனிசமாக குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன் காரணமாக அரிசி விலை கிடுகிடு வென உயர்ந்து வருகிறது.



தமிழகத்தில் வடகிழக்குப் பருவமழை இந்த ஆண்டு தாமதமாக துவங்கியது. தென் மேற்கு பருவகாற்றின் மூலம் நமக்கு கிடைக்க வேண்டிய மழை போக்கு காட்டி நின்று போனது. தாமதமாக துவங்கிய பருவ காற்றால் வழக்கமாக பெய்ய வேண்டிய மழை பெய்யாமல் வெறும் தூரலோடு நின்று போனது. மழைக்காலமாக கருதப்படும் அக்டோபர், நவம்பர், டிசம்பர் ஆகிய மாதங்களில் மட்டும் நமக்கு கிடைக்க கூடிய 797.8 மி.மீ., மழைக்கு, இதுவரை 118.56 மி.மீ., மட்டுமே பெய்துள்ளது. அதாவது பெய்ய வேண்டிய மழையளவில் 6ல் ஒரு பங்கு மட்டுமே கிடைத்துள்ளது.

ஏற்கனவே காவிரி தண்ணீரை நம்பி காத்திருந்த விவசாயிகள் முழு பரப்பளவில் நடவு செய்யாமலேயே விட்டுவிட்டனர். நடவு செய்த விவசாயிகளும் போதியளவு தண்ணீர் இல்லாததால் காப்பாற்ற முடியாமல் தவித்து வருகின்றனர். இதனால் ஆண்டுதோறும் நமக்கு கிடைக்க கூடிய நெல் உற்பத்தியில் கனிசமான அளவு இந்த ஆண்டு குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அண்டை மாநிலமான கர்நாடகாவிலும் இந்த ஆண்டு நெல் உற்பத்தி குறைந்துள்ளதால் தமிழகத்திற்கு வரக்கூடிய அரிசி நின்று போய்விட்டது. அதே சமயம் ஆந்திரா, ஒரிசா, மேற்கு வங்கம் ஆகிய மாநிலத்தில் இருந்து அரிசி மூட்டைகள் தமிழகத்தில் விற்பனை செய்யப்படுகின்றன. போக்குவரத்து செலவு அதிகமாக இருப்பதால் அரிசி விலையை அதிகளவு குறைந்து விற்பனை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இது ஒரு புறமிருக்க, தற்போது நெல் அறுவடை சரி வர நடைபெறாத நிலையில் உள்ளதாலும் அரிசி தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் கடலூர் மாவட்டத்தில் அரிசி விலை உயர்ந்து வருகிறது. சாப்பாட்டுக்காக பயன்படுத்தக் கூடிய நெல் வகைகளான பொன்னி ஒரு மூட்டை 1400 ரூபாயிலிருந்து 1600 ரூபாயாகவும், பி.பி.டி., 1350 ரூபாயிலிருந்து 1500 ரூபாயாகவும் உயர்ந்துள்ளது.

இதன்காரணமாக சாப்பாட்டு அரிசி சன்ன ரகம் பி.பி.டி., ஒரு கிலோ 40 ரூபாயிலிருந்து 45 ரூபாயாகவும், பொன்னி 42லிருந்து 50 ரூபாயகவும் உயர்ந்துள்ளது.

**சாத்தனூர் அணையிலிருந்து கூடுதல் தண்ணீர் திறக்க விவசாயிகள் எதிர்பார்ப்பு! மாவட்ட நிர்வாகம் துரித நடவடிக்கை எடுக்க வலியுறுத்தல்**

திருக்கோவிலுார்: விழுப்புரம், கடலுார், திருவண்ணாமலை மாவட்ட விவசாயிகளின் தண்ணீர் தேவையை பூர்த்தி செய்யும் சாத்தனுார் அணையின் நீர்மட்டம் மிக குறைந்த அளவே இருப்பதால் விவசாயிகள் கலக்கம் அடைந்துள்ளனர்.

விழுப்புரம், கடலுார், திருவண்ணாமலை மாவட்ட விவசாயிகளின் முக்கிய நீர் ஆதாரமாக இருப்பது தென்பெண்ணையின் குறுக்கே திருவண்ணாமலை மாவட்டத்தில் அமைந்துள்ள சாத்தனுார் அணை. குறிப்பாக விழுப்புரம் மாவட்ட விவசாயிகளின் ஒரே நீர் ஆதாரம் இது ஒன்றுதான்.

இதன் மூலம் விழுப்புரம் மாவட்டத்தில் 30 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகிறது. அத்துடன் 73 ஏரிகள் தென்பெண்ணையில் தண்ணீர் வரத்து மூலம் நிரம்பும். வழக்கமாக வடகிழக்கு பருவமழையின்போது சாத்தனூர் அணை தன் முழு கொள்ளளவான 119 அடி, அதாவது 7 ஆயிரத்தி 321 மில்லியன் கன அடியையெட்டும்.

அதற்குமேல் நிரம்பும் தண்ணீர் வெளியேற்றப்படும்போது, உபரிநீர் தென்பெண்ணையில் வழிந்தோடிவந்து திருக்கோவிலூார், எல்லீஸ் சத்திரம் உள்ளிட்ட தடுப்பணைகள் மூலம் திருப்பப்பட்டு புதுச்சேரி மற்றும் கடலூார் மாவட்ட ஏரிகளுக்கு செல்கின்றது.

வடகிழக்கு பருவமழையின் முக்கியமான தருணங்களாக கருதப்படும் கார்த்திகை மாதம் நிறைவடைந்துவிட்டதால் இனி மழைக்கான வாய்ப்பு குறைவு என்றே விவசாயிகள் கருதுகின்றனர்.

இதனால் விழுப்புரம் மாவட்டத்தில் மட்டும் 30 ஆயிரம் ஏக்கர் பரப்பளவிலான நெல் விவசாயம் முற்றிலுமாக பாதிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. நேற்றைய நிலவரப்படி அணையின் மொத்தம் உள்ள 119 அடியில், 91.60 அடி தண்ணீர் மட்டுமே இருப்பு உள்ளது. அதாவது இரண்டாயிரத்து 636 மில்லியன் கன அடியாகும். இது மொத்த நீர் இருப்பில் மூன்றில் ஒரு பங்காகும்.

இதனை இடது புறக்கால்வாய், வலது புறக்கால்வாய் மற்றும் திருக்கோவிலூார் பழைய ஆயக்கட்டு பாசனத்திற்கு பிரித்து கொடுக்க வேண்டிய கட்டாயம் பொதுப்பணித்துறைக்கு ஏற்பட்டுள்ளது.

திருவண்ணாமலை நகரம், தானிப்பாடி, சாத்தனூர் கூட்டு குடிநீர் திட்டம் மற்றும் வாணாபுரம், லாடவரம் கூட்டு குடிநீர் திட்டங்களுக்கு 282 மில்லியன் கன அடி நீர் தேவை. அணையின் குடிநீர், பூங்கா பராமரிப்பு உள்ளிட்ட பணிகளுக்காக 307 கன அடி நீர் தேவைப்படுகிறது.

நீர் ஆவியாதல் உள்ளிட்ட இதர வகையில், 732 மில்லியன் கன அடி நீர் கணக்கிடப்படுகிறது. இது போக எஞ்சியுள்ள தண்ணீரான பாதியை மட்டுமே பகிர்ந்தளிக்க வாய்ப்பு உள்ளது. இதனை விவசாயிகளின் தேவையை கருதி திறப்பதற்கு

பொதுப்பணித்துறை நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

இது நெல் உள்ளிட்ட பயிர்களுக்கு போதுமானதாக இருக்காது என்ற போதிலும், மானாவாரி பயிர்களுக்கு பயன்படுத்திக்கொள்ள வாய்ப்பு உள்ளது. உடனடியாக விவசாய பிரதிநிதிகளை கூட்டி ஆலோசனை செய்து அதற்கேற்ப தண்ணீர் திறக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் மாவட்டத்திலுள்ள விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

**சங்கராபுரம் பகுதிகளில் மஞ்சள் விளைச்சல்**

சங்கராபுரம்: சங்கராபுரம் பகுதியில் விவசாயிகள் அதிக அளவில் மஞ்சள் சாகுபடி செய்துள்ளனர்.

பொங்கல் பண்டிகை விரைவில் வரவிருக்கின்ற சூழ்நிலையில், பண்டிகையின் போது, கரும்பு, மஞ்சள் கொத்து போன்றவை முக்கிய இடம் பிடிக்கிறது.மங்கள பொருளாக விளங்கும் மஞ்சள் கிழங்கு, பொங்கல் பானையை அலங்கரிக்கவும், பூஜையில் வைத்து வழிபடவும் பயன்படுத்துகின்றனர்.

இதன் காரணமாக மஞ் சள் சாகுபடி, சங்கராபுரம் பகுதியில் அரசம்பட்டு. பாலபட்டு. குளத்துார், நெடு மானுர், ஆலத்துார் உள்ளிட்ட கிராமப்புறங்க ளில் விவசாயிகள் 500 ஏக்கரில் சாகுபடி செய்துள்ளனர். 8 மாத பயிரான மஞ் சள் பயிர் தற்போது நன்கு செழித்து வளர்ந்துள்ளது.

பொங்கல் பண்டிகை நெருக்கத்தில், மஞ்சள் அறுவடைக்கு தயார்நிலையில் உள்ளது. இந்தப்பகுதியில் அறுவடை செய்யப்படும் மஞ்சள், விழுப்புரம் மாவட்டம் மட்டுமில்லாமல் பல்வேறு மாவட்டங்களுக்கும் விற்பனைக்காக கொண்டு செல்லப்படும்.

**விவசாயிகள் பயிர் காப்பீடு செய்ய கலெக்டர் வேண்டுகோள்**

விழுப்புரம்: விழுப்புரத்தில் கூட்டுறவு கடன் சங்க செயலாளர்களுக்கான ஆலோசனைக் கூட்டம் நடந்தது.

விழுப்புரம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியில், வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க செயலாளர்களுக்கான ஆலோசனைக் கூட்டம், கூட்டுறவு சங்க இணைப் பதிவாளர் சந்திரசேகரன் தலைமையில் நடந்தது.

கூட்டத்தில், கலெக்டர் சுப்ரமணியன் பேசும்போது, "

விழுப்புரம் மாவட்டம் முழுவதும் விவசாயத் தொழில் பிரதானமாக உள்ளது. இருப்பினும் இந்தாண்டு பருவமழை போதிய அளவு பெய்யாமல் இருப்பதால், விவசாயிகளின் பயிர்கள் பாதிக்கும் நிலையை தவிர்க்க, பயிர் காப்பீடு செய்திட வேண்டும். வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க செயலாளர்கள், விவசாயிகளுக்கு கடன் வழங்கும் போதும், கடன் பெறாதவர்களையும், பயிர் காப்பீடு திட்டத்தில் சேர்த்திட வேண்டும்.

தற்போது மணிலா, உளுந்து, மரவள்ளி, வெங்காயம், மக்காச்சோளம், வாழை பயிர்களுக்கும், நவரை பட்டத்தில் நெல் பயிருக்கும் வரும் பிப்., கடை நதேதி வரை, விவசாயிகள் பயிர் காப்பீடு செய்யலாம்" என்று கலெக்டர் பேசினார்.

கூட்டத்தில், துணைப் பதிவாளர்கள், தோட்டக்கலை துறை துணை இயக்குனர்கள் மற்றும் அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**சந்தன விதை தூவும் பணி தீவிரம்**

கருமந்துறை: தொட்டித்துறை பகுதியில், 100 கிலோ சந்தன விதைகள் தூவும் பணி துவங்கியுள்ளன. கருமந்துறை வனச்சரகர் ஞானராஜ் கூறியதாவது: கருமந்துறை வனச்சரகத்தில், கிளாக்காடு மற்றும் நடுப்பட்டி ஆகிய வனப்பகுதியில், 12 ஆயிரத்து, 500 சந்தன நாற்றுகள் நடும் பணியிலும், தொட்டித்துறை பகுதியில், 100 கிலோ சந்தன விதை தூவும் பணியிலும், வனத்துறை ஊழியர்கள் ஈடுபட்டுள்ளனர். இப்பணி ஒரு மாதத்தில் முடியும். வனப்பகுதியில் அத்துமீறி நுழைவது, மது அருந்துவது போன்ற செயல்களில் ஈடுபட்டால், நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

**கருகும் சின்ன வெங்காய பயிரை காப்பது எப்படி?**

ராசிபுரம்: 'சின்ன வெங்காயம் வறட்சியை தாக்குப் பிடித்து வளருவதற்கு, ஈரப்பதம் இருக்கும் போது, மீதைலோ பாக்டீரிய திரவக்கலவையை தெளிக்க வேண்டும்' என, ராசிபுரம் வேளாண் துணை இயக்குனர் தெரிவித்தார்.

ராசிபுரம் ஒன்றியத்துக்குட்பட்ட, அணைப்பாளையம், முருக்கப்பட்டி, பட்டணம், கைலாசம்பாளையம் போன்ற பகுதிகளில், ஏக்கர் கணக்கில் நடவு செய்யப்பட்டுள்ள சின்ன வெங்காய பயிர்கள் கருகி வருகின்றன.

இதுகுறித்து, பட்டணத்தை சேர்ந்த விவசாயி தங்கவேல் கூறியதாவது: இரண்டு ஏக்கரில் சின்ன வெங்காயம் நடவு செய்துள்ளளேன். சொட்டு நீர் பாசன முறையில், வயல்களுக்கு தண்ணீர் பாய்ச்சி வந்தாலும், ஏக்கர் முழுமைக்கும் தண்ணீர் கிடைப்பதில்லை. வெயிலின் தாக்கம் அதிகரித்துள்ளதால், தண்ணீர் விட்ட சிறிது நேரத்திலேயே பயிர் காய்ந்து விடுகிறது.

ராசிபுரம், வேளாண் துணை இயக்குனர் ராஜகோபால் கூறியதாவது: நல்ல ஈரப்பதம் இருக்கும் போது, ஏக்கருக்கு, 200 லி., நீரில், பி.பி.எப்.எம்., என்ற மீதைலோ பாக்டீரியா திரவக்கரைசலை கலந்து, 20 நாட்களுக்கு ஒரு முறையோ அல்லது மாத இடைவெளியில், மூன்று முறை தெளிப்பான் கொண்டு தெளிக்க வேண்டியது அவசியம். இக்கலவை, சின்ன வெங்காய பயிர்கள், வறட்சியை தாங்கி வளர உதவும். இவ்வாறு அவர் கூறினார்.

**அரூர் பகுதியில் மரவள்ளிக்கிழங்கு அறுவடை தீவிரம்**

அரூர்: அரூர் பகுதியில் மரவள்ளிக்கிழங்கு அறுவடை செய்யும் பணி தீவிரமாக நடந்து வருகிறது.

தமிழகத்தில், தர்மபுரி, கிருஷ்ணகிரி, நாமக்கல், திருவண்ணாமலை, வேலூர், சேலம் உட்பட பல்வேறு மாவட்டங்களில் மரவள்ளிக்கிழங்கு சாகுபடி செய்யப்படுகிறது. வறட்சியை தாங்கி வளரக்கூடியது என்பதால், பெரும்பாலான விவசாயிகள் மரவள்ளிக்கிழங்கை நடவு செய்கின்றனர். நடப்பாண்டு தர்மபுரி மாவட்டத்தில், 15 ஆயிரம் ஏக்கரில் விவசாயிகள் மரவள்ளி நடவு செய்துள்ளனர். கிழங்கு அறுவடை செய்யும் பணி கடந்த, மூன்று மாதங்களுக்கு முன் துவங்கி விட்ட போதிலும், வறட்சி,

போதிய மழையின்மை காரணமாக, விவசாயிகள் மரவள்ளிக்கிழங்கை அறுவடை செய்யாமல் இருந்து வந்தனர். இந்நிலையில், கடந்த வாரம் பெய்த மழை காரணமாக, விவசாயிகள் மரவள்ளிக்கிழங்கை அறுவடை செய்யும் பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

இது குறித்து வேப்பநத்தத்தை சேர்ந்த விவசாயி பொன்பெருமாள் கூறியதாவது: நடப்பாண்டு போதிய மழை பெய்யாததால், மரவள்ளிக்கிழங்கு அறுவடை செய்ய முடியாத நிலை இருந்து வந்தது. போதிய ஈரமின்மை காரணமாக, சில இடங்களில் ஜே.சி.பி., வாகனம் மூலம் மரவள்ளிக்கிழங்கு அறுவடை செய்யும் பணி நடந்து வந்தது. கடந்த வாரம் பெய்த மழையால், தற்போது, பெரும்பாலான விவசாயிகள் தங்களது நிலங்களில் நடவு செய்யப்பட்டுள்ள மரவள்ளிக்கிழங்கை அறுவடை செய்து வருகின்றனர். கடந்த இரண்டு வாரங்களுக்கு முன் வரை, 70 கிலோ எடை கொண்ட ஒரு மூட்டை மரவள்ளிக்கிழங்கு, 650 ரூபாய்க்கு விற்பனையாகி வந்த நிலையில், தற்போது விலை குறைந்து, ஒரு மூட்டை மரவள்ளிக்கிழங்கு, 550 ரூபாய்க்கு விற்பனையாகி வருகிறது. கடந்தாண்டை காட்டிலும், நடப்பாண்டு, 30 சதவீதமே மரவள்ளிக்கிழங்கை விவசாயிகள் நடவு செய்துள்ளதால், மேலும் விலை அதிகரிக்க வாய்ப்புள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

**ஏமாற்றி வரும் பருவமழையால் மானாவாரி பயிர்களை சாகுபடி செய்ய விவசாயிகள் தயக்கம்**

தர்மபுரி: தொடர்ந்து ஏமாற்றி வரும் பருவமழையால், மானாவாரி பயிர்களை சாகுபடி செய்ய விவசாயிகள் தயங்கி வருகின்றனர். விவசாயத்தை பிரதானமாக கொண்ட தர்மபுரி மாவட்டத்தில், 60 ஆயிரம் ஹெக்டேருக்கு மேல், கேழ்வரகு, சாமை, சோளம், பருத்தி, துவரை, எள், நிலக்கடலை உள்ளிட்ட சிறுதானிய பயிர்கள் மானாவாரியாக சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. இந்தாண்டு பருவமழை விவசாயிகளை ஏமாற்றியதால், சிறுதானிய பயிர்கள் சாகுபடி செய்திருந்த விவசாயிகள், பயிர்கள் போதிய வளர்ச்சி இன்றியும், மகசூல் இன்றியும் கடுமையாக பாதிக்கப்பட்டனர். மேலும், பல ஆயிரம் ஏக்கர் நிலங்களை விவசாயிகள் சாகுபடிக்கு உழுது தயார் படுத்தி வைத்திருந்த போதும், வடகிழக்கு பருவமழை ஒரு சில நாட்கள் மட்டும் பெயரளவுக்கு பெய்தது. இதனால், விவசாயிகள் பயிர் சாகுபடி செய்வதை தவிர்த்தனர். இந்த நிலையில் சமீபத்தில் ஏற்பட்ட

வர்தா புயலால், மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில், இரு நாட்கள் பரவலாக மழை பெய்தது. இதையடுத்து, இறவை பாசன விவசாயிகள் தண்ணீர் குறைவாக தேவைப்படும் பயிர்களை சாகுபடி செய்யும் பணியில் தீவிரம் காட்ட துவங்கினர். ஆனால், வடகிழக்கு பருவமழை இறுதி காலத்தை எட்டியுள்ளதால், இனியும் மழை வருமா என்ற அச்சத்தில், மானவாரி நிலங்களில், பயிர் சாகுபடி செய்ய விவசாயிகள் தயக்கம் காட்டி வருகின்றனர். இதனால், வரும் ஆண்டில், சிறுதானியங்கள் மற்றும் எண்ணை வித்து பயிர்களின் விலை அதிகரிக்கும் வாய்ப்புள்ளதாக விவசாயிகள் கூறுகின்றனர்.

**பயிர் அறுவடை பரிசோதனைக்கு பணியாளர்களை நியமிக்க முடிவு**

ஈரோடு: பயிர் அறுவடை பரிசோதனைக்கு, பணி தேர்வு முகமை மூலம், தகுதியான ஆட்கள் நிரப்ப திட்டமிடப்பட்டுள்ளது.

ஈரோடு மாவட்ட வேளாண்மை துறை, இணை இயக்குனர் சுப்பிரமணியன் வெளியிட்டுள்ள அறிக்கை: ஈரோடு மாவட்டத்தில், பிரதமர் பயிர் காப்பீடு திட்டத்தில், அறுவடை பரிசோதனைகளை மேற்கொள்ள, தகுதி வாய்ந்த பணியாளர்களை, தற்காலிக ஒப்பந்த அடிப்படையில், பணி தேர்வு முகமை மூலம், நிரப்ப திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கு தேர்வு செய்யப்பட, குறைந்தபட்சம் மூன்று ஆண்டுகள் அனுபவம் தேவை. மேலும், அறுவடை பணி மற்றும் அதை சார்ந்த பணிகளை மேற்கொள்ள வேளாண்மை மற்றும் வேளாண் சார்ந்த இளநிலை பட்டப்படிப்பு, பட்டய படிப்புடன் கணினி இயக்கம் திறன் பெற்று இருக்க வேண்டும். வேளாண் மற்றும் புள்ளியல் துறையில், பணிபுரிந்து ஓய்வு பெற்ற அலுவலர்களும் தேர்வு செய்ய பரிசீலிக்கப்படுவர். தொகுப்பூதிய அடிப்படையில் பணி அமர்த்தப்படும். மாதாந்திர தொகுப்பூதியம், 10 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும். பணி வேண்டுவோர், உரிய சான்றிதழ்களுடன், ஈரோடு கலெக்டருக்கு, வரும், 22 அன்று மாலை, 5:00 மணிக்குள் விண்ணப்பங்களை அனுப்பி வைக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

**இலவச ஆடு வளர்ப்பு பயிற்சிக்கு அழைப்பு**

ஈரோடு: கனரா வங்கி தொழில் பயிற்சி நிலையம் சார்பில், இலவச ஆடு வளர்ப்பு பயிற்சி வரும், 21 முதல், 27 வரை நடக்கிறது. ஈரோடு, அசோகபுரம், லட்சுமி தியேட்டர் அருகில் உள்ள ஸ்ரீசரஸ்வதி வித்யாலயா சிறுவர் பள்ளி வளாகத்தில், இப்பயிற்சி நடக்க உள்ளது.

விவசாயிகள், இளைஞர்கள், பெண்கள், மகளிர் குழுவினர் பயன்பெறலாம். தமிழில் எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும். வயது வரம்பு இல்லை. மதிய உணவு உட்பட அனைத்தும் இலவசம். வறுமைக் கோட்டுக்கு கீழ் உள்ளவர்களுக்கு முன்னுரிமை. கூடுதல் விபரம் அறிய, 0424-2290338 என் எண்ணில் தொடர்பு கொள்ளலாம். இதை கனரா வங்கி முதுநிலை மேலாளர் சுதர்சன் தெரிவித்துள்ளார்.

**மண்புழு உரம் தயாரிக்கும் திட்டம் அமலுக்கு வந்தது திருப்பூர் மாவட்டத்தில் செயல்பாடு**

உடுமலை: ஊராட்சிகளின் வருவாயை அதிகரிக்க, குப்பைகளிலிருந்து, மண்புழு உரம் தயாரிக்கும் திட்டம் திருப்பூர் மாவட்டத்தில் செயல்பாட்டுக்கு வந்துள்ளது; முதற்கட்டமாக, ஒன்றிய அதிகாரிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

திருப்பூர் மாவட்ட ஊராட்சிகளில், தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ், திடக்கழிவு மேலாண்மைக்காக துாய்மைக்காவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள், கிராமத்தில் சேகரிக்கும் குப்பைகளை மக்கும் மற்றும் மக்காத குப்பையாக தரம் பிரிக்கின்றனர்.

மக்காத பிளாஸ்டிக் கழிவுகள், ஊராட்சி நிர்வாகத்தால் ஏலத்தின் அடிப்படையில் விற்பனை செய்யப்படுகிறது. இத்திட்டத்தில், அடுத்தகட்டமாக, மக்கும் குப்பை கழிவுகளிலிருந்து, மண்புழு உரம் தயாரித்து விற்பனை செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

திட்டத்தில், முதற்கட்டமாக, திருப்பூர் மாவட்ட அளவில், மடத்துக்குளம், குடிமங்கலம், தாராபுரம் மற்றும் உடுமலை ஒன்றிய அதிகாரிகளுக்கு குப்பை கழிவுகளிலிருந்து மண்புழு உரம் தயாரிக்கும் பயிற்சி மொடக்குப்பட்டியில் நடந்தது.

திருப்பூர் கலெக்டர் ஜெயந்தி துவக்கி பயிற்சியை துவக்கி வைத்தார். தொடர்ந்து, உடுமலை தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் இளங்கோவன், வேளாண் உதவி இயக்குனர்கள் மகாலிங்கம், வெங்கடாசலம் பயிற்சியளித்தனர்.

**பொறுப்பாளர்களுக்கு பயிற்சி**

இதையடுத்து அதிகாரிகள் மூலம், திடக்கழிவு மேலாண்மை பணித்தள பொறுப்பாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு வட்டாரத்திலும், மக்கள் தொகை அடிப்படையில், ஒரு ஊராட்சி, உரம் விற்பனைக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளது. விற்பனை செய்து பெரும் வருவாயை அந்த ஊராட்சிகளின் மேம்பாட்டு பணிகளுக்கு பயன்படுத்திக்கொள்ளவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 52 விவசாயிகளுக்கு ரூ.43 லட்சம் கடனுதவி தவறாமல் திரும்ப செலுத்தவும் அறிவுரை

கோத்தகிரி: கோத்தகிரி பகுதியை சேர்ந்த, 52 விவசாயிகளுக்கு, பயிர் கடனாக, ரூ.43 லட்சம் வழங்கப்பட்டது.

கோத்தகிரி பில்லிக்கம்பை தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க விவசாயிகளுக்கு, கடன் வழங்கும் நிகழ்ச்சி நடந்தது. கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் குருமூர்த்தி, விவசாயிகளுக்கு, கடன் வழங்கி பேசியதாவது: நீலகிரி மாவட்டத்தில், 75 வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் உள்ளன.

சங்க உறுப்பினர்கள் வைத்துள்ள விவசாய நிலத்துக்கு ஏற்ப, ஒவ்வொரு சங்கங்களுக்கும், ஒரு கோடி முதல், மூன்று கோடி ரூபாய் வரை வட்டியில்லா பயிர் கடன் வழங்க, இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. உறுப்பினர் எண்ணிக்கைக்கு ஏற்ப, 10 கோடி வரை கடன் வழங்கவும் தயாராக உள்ளோம்.

கடன் பெறும் விவசாயிகள், தவணை தவறாமல் உரிய நேரத்துக்குள் செலுத்த வேண்டும். மாற்றுத் திறனாளிகள் தொழில் துவங்கி முன்னேற்றம் காண,

வட்டியில்லா கடன் வழங்கப்படுகிறது.

பின்தங்கிய ஏழை மக்களுக்கு, சிறுதொழில் கடனாக, தனிநபர் மற்றும் குழுக்களுக்கும், நான்கு சதவீதம் வட்டியில் கடன் வழங்கப்படுகிறது. கூட்டுறவு கடன் சங்கங்களில் உள்ள சேவை மையம் மூலம், வருவாய் துறை சம்பந்தமான சான்றுகள் பெறவும், மின்கட்டணம் செலுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ரேஷன் கார்டில் உள்ள அங்கத்தினர்களின், ஆதார் எண்ணை தவறாமல் பதிவு செய்ய வேண்டும். இவ்வாறு, குருமூர்த்தி பேசினார்.

சங்க தலைவர் பசுவராஜ் தலைமை வகித்தார். துணைத் தலைவர் கில்லன் முன்னிலை வகித்தார். மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவர் பெள்ளி, விவசாயிகள் நலன் குறித்து பேசினார். கட்டபெட்டு மத்திய கூட்டுறவு வங்கி கிளை மேலாளர் வெண்ணிலா, கடன் சங்கங்களின் மேற்பார்வையாளர் முரளி உட்பட, சங்க செயலாளர் ஆல்துரை உட்பட பலர் பங்கேற்றனர்.

**வேளாண் அலுவலர் சங்கம் ஆலோசனை**

கரூர்: உதவி வேளாண் அலுவலர்கள் சங்க ஆலோசனை கூட்டம், கரூரில் நடந்தது. கரூரில், தமிழ்நாடு உதவி வேளாண் அலுவலர்கள் சங்க மாவட்ட ஆலோசனைக்கூட்டம் நடந்தது. மாநில தலைவர் இசக்கிமுத்து தலைமை வகித்தார். சங்கத்தின் எதிர்கால செயல்பாடு மற்றும் நிலுவையில் உள்ள கோரிக்கைகள் குறித்த ஆலோசனை நடந்தது. மாவட்ட தலைவர் சிவப்பிரகாசம், மாநில பொதுச்செயலாளர் பாஸ்கரன் மற்றும் மாநில, மாவட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர்.

**நிலக்கோட்டையில் விவசாய மாணவர்கள் அனுபவ பயிற்சி**

நிலக்கோட்டை : நிலக்கோட்டையில் விவசாயிகளுக்கு தோட்டக்கலை ஆராய்ச்சி மாணவர்கள் செயல்முறை விளக்கம் அளித்தனர்.

பெரியகுளம் தோட்டக்கலை கல்லூரி ஆராய்ச்சி மாணவர்கள் நிலக்கோட்டை பகுதியில் கிராமப்புற தோட்டக்கலை அனுபவ திட்டத்தின் கீழ் பல்வேறு பயிற்சிகளை விவசாயிகளுக்கு வழங்கி வருகின்றனர். மண்ணில்லா தொழில்நுட்பம் மூலம் கால்நடைகளுக்கு மக்காச்சோளம் தீவன உற்பத்தி குறித்த செயல் விளக்கம் அளித்தனர்.

காமலாபுரம் பகுதி விவசாயிகளுக்கு நாட்டுக்கோழி வளர்ப்புக்கு கரையான் தீவனம் உற்பத்தி குறித்து விளக்கினர். இத்தீவனத்தில் 46.3, 35, 7.3 சதவீதத்தில் முறையே புரதம், கொழுப்பு, நார்ச்சத்து உள்ளதாக கூறினர். இப்பயிற்சியில் மாணவர்கள் பொன்முத்து, ஆனந்தன், அன்பரசு, பாலாஜிகுமரன், பி.குமரேசன், கோபி, கேசவன், கார்த்திக், ஏ.குமரேசன் ஆகியோர் பங்கேற்றனர்.

**பயிர் அறுவடை பரிசோதனை பணிக்கு விண்ணப்பிக்கலாம்**

திண்டுக்கல்: திண்டுக்கல்லில் பயிர் அறுவடை பரிசோதனை பணிக்கு பணித்தேர்வு முகமை மூலம் பணியாளர்கள் நியமிக்க உள்ளதாக கலெக்டர் டி.ஜி.வினய் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது: பணித்தேர்வு முகமை பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் வழங்க, 3 ஆண்டுகள் அனுபம் பெற்றிருக்க வேண்டும். வேளாண் மற்றும் அதை சார்ந்த இளநிலை பட்டயப்படிப்பு, பட்டப்படிப்பு, கணினி இயக்கும் திறன் பெற்றிருக்க வேண்டும். வேளாண் மற்றும் புள்ளியியல் துறையில் பணிபுரிந்து ஒய்வூப்பெற்ற அலுவலர்களுக்கு முன்னுரிமை உண்டு.

தேர்வாகும் பணியாளர்களுக்கு தொகுப்பூதியமாக ரூ.10 ஆயிரம் வழங்கப்படும். பதிவுத்துறையில் பதிவு செய்து செயல்பட்டு வரும் பணி நியமன முகமைகள், அதன் விவரங்கள், பணியாளர்களை வழங்க சேவை கட்டணம் உள்ளிட்ட விவரங்களை டிச.22.,க்குள் வேளாண் இணை இயக்குனர், மாவட்ட கலெக்டர் அலுவலகம், திண்டுக்கல் முகவரிக்கு விண்ணப்பிக்கலாம், என தெரிவித்தார்.

**கம்பம் பகுதியில் மாங்காய் விளைச்சல் அமோகம் பருவம் தவறிய பட்டம் கை கொடுக்குமா...**

கம்பம்: கம்பம் பகுதியில் கொத்து கொத்தாய் மாங்காய்கள் விளைச்சல் ஏற்பட்டுள்ளது.பருவம் தவறிய விளைச்சலை பயன் அளிக்குமா என விவசாயிகள் சந்தேகம் அடைந்துள்ளனர்.

தேனி மாவட்டத்தில் மா, கொய்யா, திராட்சை, வாழை, தென்னை, காய்கறி பயிர் வகைகள் அதிக பரப்பில் சாகுபடியாகிறது. சமீபமாக மா சாகுபடி பரப்பு அதிகரித்துள்ளது. இதில் பெரியகுளம் மா சாகுபடியில் முதலிடம் பிடித்து வருகிறது. போடி, சின்னமனுார், ஆண்டிபட்டி, கம்பம், வருஷநாடு பகுதிகளிலும் ஆயிரக்கணக்கான ஏக்கரில் மா சாகுபடி செய்யப்படுகிறது.

**தண்ணீர் அதிகம்**

**தேவையில்லை:**

இதற்கு அதிக தண்ணீர் தேவையில்லை. வறட்சியை தாங்கி வளரக்கூடியது. உரம், பூச்சி மருந்து பயன்பாடு குறைவு, நல்ல வருவாய் தரக்கூடியது. எனவே மா சாகுபடியை விவசாயிகள் விரும்புகின்றனர்.டிசம்பர் முதல் ஜனவரி வரை பூ பூத்து, மார்ச், ஏப்ரலில் அறுவடை செய்வார்கள். தொடர்ந்து ஆகஸ்ட் வரை கோடை காய் கிடைக்கும் வழக்கம்.

**கொத்து கொத்தாய் காய்ப்பு:**

ஆனால் தற்போது கம்பம் பள்ளத்தாக்கில் சாகுபடி செய்யப்பட்டுள்ள கல்லாமை. பங்கனப்பள்ளி, காசா, செந்துாரம் உள்ளிட்ட சில ரக மரங்களில் மாங்காய்கள் 'கொத்து கொத்தாய்' தொங்குகின்றன. அதிக விளைச்சல் ஒருபுறம் சந்தோஷமாக இருந்தாலும் மறுபுறம் விவசாயிகளுக்கு சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. காரணம் இந்த மாதம் தான் பூ பூக்க துவங்கும். இப்போது காய்கள் விளைச்சல் இருப்பதால், வரும் சீசனில் காய் விளைச்சல் இருக்குமா என சந்தேகிக்கின்றனர்.

**விவாயிகள் அச்சம்:**

கம்பம் முன்னோடி விவசாயி எல்.ராஜேந்திரனின், 'தற்போது மா மரங்களில் காய் விளைச்சல் உள்ளது. டிசம்பர் முதல் ஜனவரி வரை பூ பூக்கும் தருணமாகும். மார்ச் முதல் ஏப்ரல் வரை காய் சீசனாகும்.

ஆனால் தற்போது மா விளைச்சல் சந்தோஷத்தை தந்தாலும், சீசனில் காய் கிடைக்குமா என்பது சந்தேகத்தை ஏற்படுகிறது' என்றார்.

**சீசன் மாறியதா:**

மண் பரிசோதனை ஆய்வகஅலுவலர் சங்கர், 'தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழை கிடைக்கவில்லை.பொதுவாக 'மழையில்லாவிட்டால் மாங்காய் பொங்கும்' என்பது பழமொழி. அதனடிப்படையில் காய்கள் விளைச்சல் உள்ளது. இதனால் வரும் சீசனுக்கு பாதிப்பிருக்காது. டிச.முதல் ஜனவரி வரை பூக்க வேண்டிய பூக்கள், பிப்ரவரியில் பூக்க

ஆரம்பித்து, விளைச்சல் ஜூன் முதல் ஆரம்பமாகும். எனவே கடந்தாண்டு நிலவிய சீதோஷ்ண மாற்றத்தால் மாங்காய் சீசன் மாறியுள்ளது. விளைச்சல் நன்றாக இருக்கும் சந்தேகம் கொள்ள வேண்டாம்' என்றார்.

**பருவநிலை மாற்றம்: அவரை பாதிப்பு**

தேவாரம்: தேவாரம் பகுதியில் அவரை காய்களில் கரும்புள்ளிகளுடன் ஓட்டை விழுவதால் விவசாயிகள் பாதிப்படைந்துள்ளனர்.

தேவாரம், கோம்பை, அய்யம்பட்டி, புலிகுத்தி பகுதியில் ஆயிரம் ஏக்கருக்கு மேல் அவரை பயிரிடப்பட்டுள்ளது. அவரைக்காய் பறிப்பு மும்முரமாக உள்ள நிலையில், பருவநிலை மாறுபாடால் கரும்புள்ளிகளுடன் காயில் ஓட்டை விழுவதால் விவசாயிகள் பாதிப்படைந்துள்ளனர்.

பறிக்கப்பட்ட காயில் 60 சதவீதம் வீணாவதால் நஷ்டம் ஏற்படும் வாய்ப்புள்ளது. புலிக்குத்தி விவசாயி பொன்னுச்சாமி கூறுகையில், 'பகலில் கோடையை போல வெப்பமும், இரவில் பனி விழுவதால் அவரை செடிகள் பாதிப்படைந்துள்ளன. கடந்த சில நாட்களுக்கு முன் பெய்த மழையில் செடியின் அடிப்பாகத்தில் உள்ள பூக்களில் சேறு படிந்தது. இந்த பூ காய்க்கும் போது கரும்புள்ளிகள் விழுகின்றன.

அறுவடைக்கு தயாராகும் போது ஓட்டை விழுகிறது. ஏக்கருக்கு ரூ.10 ஆயிரத்திற்கு மேல் செலவழித்துள்ள நிலையில், அவரைக்காய் சேதமடைவதால் நஷ்டம் ஏற்படும்,' என்றார்.

**கமுதியில் சூரியகாந்தி விளைச்சல்... அமோகம் நோய் தீர்க்கும் மருந்தாக பயன்படுகிறது**

கமுதி: நோய் தீர்க்கும் மருந்தாக பயன்படும் சூரியகாந்தி விளைச்சல் கமுதி, முதுகுளத்துார் பகுதிகளில் அதிகரித்துள்ளது.

கமுதி, முதுகுளத்துாரில் சில ஆண்டுகளுக்கு முன்பு வரை 2,000 ஹெக்டேரில் சூரியகாந்தி விவசாயம் செய்யப்பட்டது. போதிய தண்ணீரின்றி சூரியகாந்தி சாகுபடி செய்ய விவசாயிகளிடையே ஆர்வம் குறைந்தது.

இந்நிலையில், சூரியகாந்தி சாகுபடியை அதிகரிக்கும் நோக்கில் கமுதி பேரையூர் அருகே நம்மாழ்வார் விவசாய கல்லூரியில் 5 ஏக்கரில் சூரியகாந்தி சாகுபடி செய்யப்பட்டு, மகசூல் கிடைக்கும் நிலையில் உள்ளது.

இதனால், லாபம் மட்டுமின்றி உடலில் உள்ள தீராத நோய்களுக்கும் இயற்கை மருந்து கிடைத்துள்ளதால், பேரையூர் விவசாயிகள் சூரியகாந்தி சாகுபடி செய்ய ஆர்வம் காட்டி வருகின்றனர். இதுகுறித்து விவசாய கல்லூரி பேராசிரியர் பால்சாமி கூறியதாவது:

சூரியகாந்தி விதையை பச்சையாகவோ, வேக வைத்தோ சாப்பிலடலாம். இதில் அதிகளவு வைட்டமின் ஏ, பி, ஈ, கால்சியம், நைட்ரஜன், இரும்பு சத்துகள் உள்ளது. விதைகள் கால்நடைகள், பறவைகளுக்கு உணவாக பயன்படுத்தப்படுகிறது, சூரியகாந்தி எண்ணெய் தோல், தீராத வயிற்றுப்புண்களுக்கு சிறந்த மருந்தாக உள்ளது.

இதன் வேர் சித்த மருத்துவத்தில் பாம்பு, சிலந்தி கடிக்கு மருந்தாக பயன்படுத்தபட்டு வருகிறது. இலையை கொதிக்க வைத்து தண்ணீரை குடிப்பதால் காய்ச்சல், நுரையீரல், வயிற்றுபோக்கு குணமடைகிறது, என்றார்.

**மண்வள அட்டை பெற விவசாயிகளுக்கு அழைப்பு**

ராமநாதபுரம்: விவசாயத்துறையால் வழங்கப்படும் இலவச மண்வள அட்டை பெறுவதற்கு விவசாயிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து வேளாண்மை இணை இயக்குனர் அரிவாசன் கூறியிருப்பதாவது:

மண் வளமே பயிர் வளர்ச்சிக்கு ஆதாரம். மண்ணில் மண் புழுக்கள் மற்றும் நன்மை தரும் நுண்ணுயிர்கள் நிறைந்திருந்தால் மட்டுமே மண் ஜீவன் உள்ளதாக கருதப்படும். இந்த மண்ணில் அங்கக சத்து அதிகரித்து காணப்படுவதுடன், பயிர் உற்பத்தி திறனும் அதிகரிக்கும்.

விளை நிலங்களின் மண் வளத்தை குறிப்பிட்ட கால இடைவெளியில் அறிந்து அதற்கேற்ப சமச்சீர் உரமிடுவதால் மண் வளத்தை தொடர்ந்து பாதுகாக்க முடியும்.

இதற்காக, 2011-12ல் அனைத்து பண்ணை குடும்பங்களுக்கும் ஒருங்கிணைந்த விவசாயிகள் கையேடு வழங்கும் திட்டத்தை மறைந்த முதல்வர் ஜெ., செயல்படுத்தினார்.

இத்திட்டத்தை முன்னோடியாக கொண்டு பிரதமர் மோடி கடந்த ஆண்டில் 'மண்வள அட்டை' வழங்கும் திட்டத்தை துவக்கினார். இரண்டு ஆண்டிற்குள் அனைத்து விவசாயிகளுக்கும் இலவசமாக மண்வள அட்டை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதன் மூலம் விவசாயிகள் நிலத்தின் மண்வளத்தை அறியவும், மண்ணில் பிரச்னை உள்ளதை அறிந்து நிவர்த்தி செய்ய முடியும். மண்ணிற்கு ஏற்ற பயிரை சாகுபடி செய்யலாம். ரசாயன உரங்களை குறைத்து தொழு உரம், பசுந்தாளுரம், நுண்ணுயிர் உரங்களை பயன்படுத்த மண்வள அட்டையில் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

நடப்பு ஆண்டில் அனைத்து விவசாயிகளுக்கும் மண்வள அட்டை இலவசமாக வழங்கப்படுகிறது.

தமிழக அரசால் வழங்கப்படும் இதனை பெற்று அதிக மகசூல் பெறலாம். ராமநாதபுரம் மாவட்டத்தில் கடந்த 2 ஆண்டுகளில் இதுவரை 1 லட்சத்து 8,500 பண்ணை குடும்பங்களுக்கு மண்வள அட்டை வழங்கப்பட்டுள்ளது.

எனவே, அனைத்து விவசாயிகளும் சமபந்தப்பட்ட வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்களை அணுகி இலவச மண்வள அட்டை பெறலாம்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

**பயிர் அறுவடை ஆய்வு பணி ஒப்பந்த பணியாளர்கள் தேர்வு**

ராமநாதபுரம்: ராமநாதபுரம் மாவட்டத்தில் செயல்படுத்தப்படும் பிரதமரின் பயிர் காப்பீடு திட்ட பயிர் அறுவடை பரிசோதனை மேற்கொள்ள தகுதி வாய்ந்தோர் தற்காலிக ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்யப்பட உள்ளனர்.

குறைந்தது மூன்றாண்டுகள் அனுபவம் பெற்றிருக்க வேண்டும். பயிர் அறுவடை பரிசோதனைகளின் தேர்வுப்பணியில் அறுவடை மற்றும் அதன் சார்ந்த பணிகளை

மேற்கொள்ள வேளாண்மை மற்றும் வேளாண்மை சார்ந்த இளநிலை பட்டப் படிப்பு, கம்ப்யூட்டர் இயக்கும் திறன் பெற்றிருக்க வேண்டும்.

வேளாண் மற்றும் புள்ளியியல் துறை ஓய்வு அலுவலர்களும் பணிக்கு பரிசீலிக்கப்படுவர். தேர்ந்தெடுக்கப்படும் பணியாளருக்கு மாதம் 10 ஆயிரம் ரூபாய் தொகுப்பூதியம் வழங்கப்படும். பதிவு பெற்ற பணி நியமன ஏஜென்சிகள் பணியாளர்களை தேர்வு செய்ய ஏஜென்சி விவரங்கள், அனுபவம், ஒப்பந்த பணியாளர்களை வழங்க சேவை கட்டணம் ஆகிய விவரங்களை அனுப்பலாம்.

தகுதியானவர்கள் வேளாண் இணை இயக்குனர், வேளாண் இணை இயக்குனர் அலுவலகம், கலெக்டர் அலுவலக வளாகம், ராமநாதபுரம் என்ற முகவரிக்கு டிச., 22க்குள் விண்ணப்பிக்கலாம், என கலெக்டர் நடராஜன் தெரிவித்துள்ளார்.

**விளைச்சல் பாதிப்பு கணக்கெடுப்பு**

திருவாடானை: விளைச்சல் பாதிப்பு குறித்த கணக்கெடுப்பு துவக்கப்படும், என்று திருவாடானை தாசில்தார் தாமஸ் கூறினார். அவர்

கூறியதாவது:

தொண்டி ஐஸ் கம்பெனியில் காஸ் சிலிண்டர் வெடித்ததில் 2 பேர் இறந்தனர். இப்பகுதியில் அனுமதி இல்லாமல் செயல்படும் கம்பெனிகள் குறித்து விரைவில் ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கப்படும். காஸ் சிலிண்டர் விபத்தில் இறந்த, காயமடைந்தவர்களுக்கு நிவாரண உதவித் தொகை வழங்க நடவடிக்கை எடுக்கபட்டுள்ளது.

திருவாடானை தாலுகாவில் இந்த ஆண்டு மழை பொய்த்ததால் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது. தாலுகாவில் 98 குரூப்களில் உள்ள பாதிக்கப்பட்ட விவசாய நிலங்கள் குறித்து கணக்கெடுப்பு விரைவில் மேற்கொள்ளப்படும். தாலுகா அலுவலர்கள், வேளாண்மை மற்றும் புள்ளியியல் துறை அலுவலர்கள் தனித்தனியாக ஆய்வு பணியை மேற்கொள்வார்கள். அவர்களின் அறிக்கை கலெக்டரிடம் சமர்ப்பிக்கபடும், என்றார்.

**அடிகுழாய் அகற்றம் விவசாயிகள் எதிர்ப்பு**

திருப்பாச்சேத்தி: திருப்பாச்சேத்தி அருகே திடலில் விவசாயிகள் பயன்பாட்டிற்காக 5 ஏக்கரில் நெல் களம் உள்ளது. இங்கு விவசாயிகள் கரும்பு, நெல், தேங்காய் போன்றவற்றை தேக்கி வைத்து வெளியூர்களுக்கு அனுப்பி வருகின்றனர். மேலும் நெற்கதிர் அடிக்கும் களமாகவும் உள்ளது. தண்ணீர் தேவைக்காக அப்பகுதியில் ஒன்றிய நிதியில் அடிகுழாய் அமைக்கப்பட்டது. இந்த அடிகுழாய் கால்நடைகளுக்கும் பயன்படுத்தப்பட்டு வந்தது. சமீபத்தில் அதனருகே தேசிய வேலையுறுதி திட்டத்தில்

13 லட்சத்து 12 ஆயிரம் ரூபாயில் ஊரக சேவை மையம் கட்டப்பட்டது.

இதற்காக அடிகுழாயை அகற்றி விட்டு, நீர்மூழ்கி மோட்டார் பொருத்தி தண்ணீர் எடுத்து வந்தனர். கட்டுமான பணிகள் முடிந்ததும் மோட்டாரை எடுத்துச் சென்றுவிட்டனர். ஆனால் அடிகுழாயை பொருத்த வில்லை. இதற்கு அப்பகுதி மக்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

விவசாயி சோனைமுத்து கூறுகையில், " அடிகுழாயை அனைவரும் பயன்படுத்தி வந்தோம். சேவை மையம் கட்டுவதற்காக மோட்டார் பொருத்தியதால் கண்டுகொள்ளாமல் இருந்தோம். தற்போது மோட்டார் எடுத்துவிட்டனர்; அடிகுழாயை பொருத்தவில்லை. தண்ணீர் பிடிக்க முடியவில்லை," என்றார்.

பி.டி.ஓ., ஜஹாங்கீரிடம் கேட்டபோது அடிகுழாயை அகற்றியது குறித்து பதிலளிக்க மறுத்துவிட்டார்.

தினமணி

**விவசாயிகளுக்கான வானிலை: செல்லிடப்பேசியில் குறுந்தகவல்**

வானிலை தொடர்பான அறிவிப்புகளை விவசாயிகளின் செல்லிடப்பேசிக்கு குறுஞ்செய்தியாக அனுப்பும் புதிய சேவையை இந்திய வானிலை ஆய்வு மையம் அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்திய வானிலை ஆய்வு மையத்தின் விவசாய வானிலை பிரிவு மற்றும் வேளாண் துறையின் பிரிவான புவி அறிவியல் துறையும் இணைந்து இந்தச் சேவையை அறிமுகப்படுத்தியுள்ளன.

இதன்படி, தமிழக விவசாயிகள் சென்னை வானிலை ஆய்வு மையத்தின் ஜ்ஜ்ஜ்.ண்ம்க்ஸ்ரீட்ங்ய்ஹண்.ஞ்ர்ஸ்.ண்ய் என்ற இணையதளத்தில் சென்று தங்களின் 10 இலக்க செல்லிடப்பேசி எண்களைப் பதிவு செய்ய வேண்டும். மேலும் அதில் எந்த மாநிலம் மற்றும் மாவட்டத்தைச் சேர்ந்தவர், என்னென்ன பயிர்கள் பயிரிடுவார் (ஒருவர் 5 பயிர்கள் வரை குறிப்பிடலாம்) என்பதையும் பதிவு செய்ய வேண்டும். மேலும் தங்களுக்கான மொழியையும் தேர்வு செய்ய வேண்டும். ஆங்கிலம், தமிழ், ஹிந்தி, மலையாளம் உள்ளிட்ட 12 மொழிகளில் இந்தச் சேவை அளிக்கப்பட உள்ளது. இந்த இணையதளத்தில் சென்று ஒரு விவசாயி பதிவு செய்துவிட்டால், அவருக்கு விவசாயம் தொடர்பான வானிலை முன்னறிவிப்புகள் செல்லிடப்பேசியில் குறுஞ்செய்தியாக அனுப்பப்படும். அந்த விவசாயி பதிவு செய்த குறிப்பிட்ட பயிர்களுக்கான பிரத்யேக வானிலை முன்னறிவிப்பும் வாரம் ஒரு முறை அனுப்பப்படும். விவசாயிகளுக்கு ஏதேனும் வானிலை முன்னெச்சரிக்கை இருந்தாலும் அதுவும் செல்லிடப்பேசிக்கு குறுந்தகவல் அனுப்பப்படும் என்று வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

**52 ஆண்டுகளுக்குப்பின் தூர்வாரப்படும் சூரம்பட்டி அணைக்கட்டு: பொதுமக்கள், விவசாயிகள் மகிழ்ச்சி**



ஈரோடு மாநகராட்சிப் பகுதியில் உள்ள சூரம்பட்டி அணைக்கட்டில் 52 ஆண்டுகளுக்குப் பிறகு தூர்வாரும் பணி ஞாயிற்றுக்கிழமை தொடங்கியது. இதனால், விவசாயிகள், பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

கீழ்பவானி கால்வாயில் இருந்து வெளியேறும் கசிவுநீரை சேமித்து அதன் மூலமாக பாசனம் பெறும் வகையில் கடந்த 1964-ஆம் ஆண்டு காமராஜர் காலத்தில் ஈரோடு சூரம்பட்டி அணைக்கட்டு கட்டப்பட்டது. 12 ஏக்கர் பரப்பளவில் கட்டப்பட்ட சூரம்பட்டி அணைக்கட்டில் தண்ணீரைச் சேமித்து வைத்து அங்கிருந்து நஞ்சை ஊத்துக்குளி ஊட்டுக்கால்வாய் மூலமாக 2,500 ஏக்கர் பாசன நிலங்கள் பாசனம் பெறும் வகையில் வாய்க்கால் வெட்டப்பட்டது.

காலப்போக்கில் நஞ்சை ஊத்துக்குளி கால்வாயின் இருபுறமும் வீடுகள் கட்டப்பட்டு, அப்பகுதியின் குப்பைகள் கொட்டப்பட்டதால் வாய்க்கால் தூர்ந்துபோய் தண்ணீர் செல்ல முடியாத நிலை ஏற்பட்டது. கடைசியாக கடந்த 2005-ஆம் ஆண்டு வரையிலும் சூரம்பட்டி அணைக்கட்டில் இருந்து பாசனத்துக்குத் தண்ணீர் திறக்கப்பட்ட நிலையில் அதன்பிறகு முற்றிலும் நிறுத்தப்பட்டுவிட்டது.

வாய்க்காலைப் போலவே சூரம்பட்டி அணைக்கட்டும் தூர்ந்து போனதால் தண்ணீரை அதிக அளவில் சேமித்து வைக்க முடியாத நிலை ஏற்பட்டது. இதனிடையே 12 ஏக்கர் பரப்பளவில் இருந்த சூரம்பட்டி அணைக்கட்டுப் பகுதியையொட்டி 200-க்கும் மேற்பட்ட வீடுகள் கட்டி ஆக்கிரமிக்கப்பட்டதால் அணைக்கட்டின் நீர்பிடிப்பு பரப்பும் சுருங்கிப்போனது.

இதையடுத்து, சென்னை உயர்நீதிமன்ற உத்தரவுப்படி ஆக்கிரமிப்பு வீடுகளை அகற்றி அணைக்கட்டின் நீர்பிடிப்புப் பகுதி மீட்கப்பட்டது. இருப்பினும், சூரம்பட்டி அணைக்கட்டு கட்டியதில் இருந்து ஒருமுறை கூட தூர்வாரவே இல்லை என்பதால் அணைக்கட்டு முழுவதும் வண்டல் மண், திடக்கழிவுகளால் சேறும், சகதியுமாகவே இருந்தது.

எனவே, அணைக்கட்டை தூர்வாரத் திட்டமிட்ட மாவட்ட நிர்வாகம் கடந்த ஜூன் மாதம் இதுதொடர்பான அறிக்கையை அரசிதழில் வெளியிட்டது. அதன்படி, விவசாயிகள் இலவசமாக வண்டல் மண்ணை எடுத்துச் செல்ல பொதுப்பணித் துறை மூலமாக அனுமதி வழங்கப்பட்டது.

ஆனால், திடக் கழிவுகளால் நிரம்பிக் கிடந்த அணைக்கட்டில் இருந்து வண்டல் மண் எடுத்துச் செல்ல விவசாயிகள் ஆர்வம் காட்டவில்லை. இதனால், தூர்வாரும் பணி பல்வேறு காரணங்களால் தள்ளிப்போனது.

இந்நிலையில், ஈரோடை தன்னார்வ அமைப்பு சூரம்பட்டி அணைக்கட்டில் தூர் வாரும் பணியை மேற்கொள்ள முன்வந்துள்ளது. ரூ. 18 லட்சம் செலவில் தூர்வாரும் பணியை மேற்கொள்ள ஈரோடை அமைப்பு முன்வந்துள்ளதுடன் இப்பணி ஞாயிற்றுக்கிழமை தொடங்கியது. மாவட்ட ஆட்சியர் எஸ்.பிரபாகர் இப்பணியைத் தொடக்கி வைத்தார். ஈரோடை அமைப்பின் நிறுவனரும், சுதா மருத்துவமனையின் நிர்வாக இயக்குநருமான மருத்துவர் சுதாகர், மருத்துவர் பிரதீபா சுதாகர் ஆகியோர் வரவேற்றனர். மாநகராட்சி ஆணையர் சீனி அஜ்மல்கான், கீழ்பவானி வடிநிலக் கோட்ட பொதுப்பணித் துறை செயற்பொறியாளர் ராஜு, உதவி பொறியாளர் ஜெகதீஷ் உள்ளிட்டோர் பங்கேற்றனர். அதைத்தொடர்ந்து, மாவட்ட ஆட்சியர் பிரபாகர் நிருபர்களிடம் கூறியதாவது:

சூரம்பட்டி அணைக்கட்டு தூர்வாரி அதன் மண்ணை இரு கரையிலும் கொட்டி வைப்பதன் மூலமாக 20 அடி வரை ஆழப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இப்போது அரை டிஎம்சி வரை மட்டுமே நீர் சேமிக்கப்பட்டு வந்த நிலையில் இனிமேல் ஒரு டிஎம்சி சேமிக்க முடியும். இதன் மூலமாக மாநகராட்சிப் பகுதியில் நிலத்தடி நீர்மட்டம் உயரும் என்றார். சூரம்பட்டி அணைக்கட்டு கட்டி முடித்து 52 ஆண்டுகளுக்குப் பிறகு முதன்முறையாக தூர்வாரும் பணி தொடங்கப்பட்டுள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**மாவட்டம் முழுவதும் 40 குளங்களில் தூர்வாரும் பணி நிறைவு**

தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் உதவியுடன் ஈரோடு மாவட்டத்திலுள்ள நீர்நிலைகளான ஏரி, குளங்கள், கசிவுநீர் குட்டைகள் தொடர்ந்து ஆழப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது. அதன்படி, ஈரோடு மாநகரைச் சுற்றியுள்ள இரட்டைப்பாளிவலசு

குளம், செம்மாம்பாளையம் குட்டை, மூலக்கரை, கூரப்பாளையம், ரங்கன்பள்ளம், சிந்தன்குட்டைகள் தூர்வாரப்பட்டுள்ளன.

அன்னை சத்யா நகர், வரட்டுப்பாளையம் குளங்கள் தூர்வாரும் பணி நடைபெற்று வருகிறது. இதுபோக கவுந்தப்பாடி அருகே ஓடத்துறை, சஞ்சீவராயன்குளம், அனந்தசாகம்குளம், கொளப்பலூர் பகுதியிலுள்ள குளங்கள், சத்தி, பவானிசாகர் சுற்றுப்பகுதியில் 17 குளங்கள், தாளவாடியில் 11 குளங்கள் என மொத்தம் மாவட்டம் முழுவதும் 40 குளங்கள் தூர்வாரப்பட்டுள்ளன.

**பழங்குடியின விவசாயிகளுக்கு மண்வள மேலாண்மை பயிற்சி முகாம்**




பழங்குடியினருக்கு மண்வள மேலாண்மை, மண் மாதிரி எடுத்தல் குறித்த விழிப்புணர்வுப் பயிற்சி முகாம் கோத்தகிரி அருகே கோழிக்கரை கிராமத்தில் நடைபெற்றது. முகாமில், மண்வள பாதுகாப்பு ஆராய்ச்சியாளர்கள் மூலமாக பயிற்சி அளிக்கப்பட்டது. மண்ணில் ஏற்படும் குறைகளால் பயிருக்கு ஏற்படும் பாதிப்புகள் குறித்து ராஜாவும், மண்ணில் சத்து குறைபாட்டால் பயிர் விளைச்சல் குறைதல், அமில மண்ணில் சுண்ணாம்பு இடுவதன் முக்கியத்துவத்தைக் குறித்து கண்ணனும், மண் அரிப்பைத் தடுத்தல், மழைநீர் சேகரிப்பு குறித்து சுந்தராம்பாளும் பேசினர். அதேபோல, அமில மண்ணில் கிடைக்கும் பயிர் சத்துகள், மண் பரிசோதனை குறித்து க.ராஜனும், மண்வள மேலாண்மையால் கிடைக்கும் பயிர் விளைச்சல், லாபம் குறித்து ஓ.பி.எஸ்.கோலாவும், உதகை மண், நீர்வளப் பாதுகாப்பு ஆராய்ச்சி மையத்தால்

பழங்குடியின மக்களுக்கு கிடைத்துள்ள நன்மைகள் குறித்து நீலகிரி ஆதிவாசிகள் நலச் சங்கத்தின் கள ஒருங்கிணைப்பாளர் பாலசுப்பிரமணியனும் விவரித்தனர். இந்நிகழ்ச்சியின் ஒருபகுதியாக மண் மாதிரி எப்படி எடுப்பது என்பது குறித் செயல்முறை விளக்கம் அளிக்கப்பட்டது. தொடர்ந்து, விவசாயிகள், ஆராய்ச்சியாளர்களுக்கிடையே கலந்துரையாடல் நடத்தப்பட்டு விவசாயிகளின் சந்தேகங்கள் தீர்த்து வைக்கப்பட்டன. தொடர்ந்து, பழங்குடியின விவசாயிகளின் சுயஉதவிக் குழுவுக்கு மூலிகை மருந்துகளை அடைத்து விற்பதற்காக பிளாஸ்டிக் பைகளை சூடுபடுத்தி குப்பிகளுக்குமேல் ஒட்டும் இயந்திரமும், பிளாஸ்டிக் பைகளை சீல் வைக்கும் இயந்திரமும் இலவசமாக வழங்கப்பட்டது.

இதில் கோழிக்கரை, மேல்கூப்பு, கோழித்துரை ஆகிய கிராமங்களைச் சேர்ந்த பழங்குடியினர் திரளாகப் பங்கேற்றனர்.

**விவசாயிகளுக்கு சூரியவிளக்குப் பொறி விநியோகம்**



தாராபுரம் அருகே வேளாண்மைத் துறை சார்பில் விவசாயிகளுக்கு சூரியவிளக்குப் பொறி விநியோகிக்கும் முகாம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. வீராட்சிமங்கலம் கிராமத்தில் நடைபெற்ற இந்த முகாமுக்கு வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் எஸ்.எம்.ஞானசேகரன் தலைமை வகித்தார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் விஜய்ஆனந்த், உதவி மேலாளர் சங்கர், சித்ராதேவி ஆகியோர் முன்னிலை வகித்தனர். முகாமில் விவசாயிகளுக்கு சூரியவிளக்குப் பொறிகளை வழங்கி வேளாண்மை உதவி இயக்குநர் எஸ்.எம்.ஞானசேகரன் கூறியதாவது:

நடப்பு நிதியாண்டில் தாராபுரம் வட்டாரத்தில் அம்மா திட்டத்தின்கீழ் விவசாயிகளுக்கு இரண்டு சூரியவிளக்குப் பொறிகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த சூரியவிளக்குப் பொறி பகலில் சூரிய வெளிச்சத்தின் மூலம் மின்சாரத்தை சேமிக்கும். இரவில் அதிலிருந்து வெளிப்படும் புற ஊதாக் கதிர்கள் காரணமாக வயலில் உள்ள தாய்அந்து பூச்சிகள் விளக்குப் பொறியின் கீழ்ப்பக்கம் அமைக்கப்பட்டுள்ள தண்ணீர், மண்ணெண்ணெய் உள்ள பிளாஸ்டிக்கால் ஆன தட்டில் விழுந்து இறந்துவிடும். இதனால் பூச்சியினுடைய இனப்பெருக்கம் கட்டுப்படுத்தப்படுகிறது.

ஒரு தாய் அந்துப்பூச்சியானது 200 முட்டைகள் இடக்கூடியது. இந்த சூரியப்பொறி சூரிய சக்தியின் ஆற்றலைக் கொண்டு இயங்குவதால் மின்சாரம் தேவைப்படுவதில்லை. வயலில் தேவைப்படும் இடங்களுக்கு எடுத்துச் சென்றும் பயன்படுத்தலாம்.

இந்தப் பொறி வேளாண்மை, தோட்டக்கலை பயிர்களுக்கும் ஏற்றது என்றார். முகாமில் அம்மா திட்டக் குழு தலைவர் திருஞானசம்பந்தம் உள்பட வேளாண்மை, தோட்டக்கலை அதிகாரிகள் பங்கேற்றனர்.